"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து சொல்வேன் !
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா வெளி நாடு மூன்றணா.

மலர் 1 | சென்னை | 6—7—1954 | செவ்வாய் | இதழ் 3

கிண்டலா?... ... .தாக்குதலா?

இரண்டு இதழ்களைக் கண்ட தோழர்களின் கைக்கு இந்த மூன்றாவது 'தென்றல்' வருகிறது. வரவேற்பும் வாழ்த்தும் தென்றலுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டுகின்றன. வரவேற்றவர்களிலும் வாழ்த்தியவர்களிலும் சிலர் குறைகளும் கூறியுள்ளார்கள். உதாரணமாக சென்னையைச்சேர்ந்த தோழர் என். நாராயணன் என்பவர், முதல்இதழைப் பாராட்டி விட்டு, இரண்டாவது இதழைப் பற்றிக் குறிப்பிடுகையில், "நேரடித் தாக்குதல் வேண்டாம்; அது அண்ணா அவர்களின் கொள்கைக்கு முற்றும் புறம்பானது" என்று கூறுகிறார். தோழர் கருணாநிதியும் இதே கருத்தைக் கூறினார். மற்றும் சிலர் இதுபற்றிக் குறிப்பிட்டு எழுதியுள்ளனர்.

* * *

இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. மக்கள் எந்தப் பாதையை விரும்புகிறார்கள்; எதற்குப் பண்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டோம். நயமான வழியில் நாட்டமா, அல்லது கோபாவேசத்தை விரும்புகிறார்களா என்று புரியாமல் இருந்தோம். நாம் பயந்தபடி இல்லை; மக்கள் அண்ணாவின் நளினத்துக்கு முற்றும் பண்பட்டுவிட்டார்கள் என்பதை அறிய உண்மையில் மகிழ்கிறோம். மேடையையும் பத்திரிகையையும் குடுகுடுப்பைக் காரன் சட்டை மாதிரி ஆக்கிவிட்டிருக்கிறார்களே எதிர்க்கட்சிக் காரர்கள். 'அவர்களுக்கு உண்மையில் நாட்டு மக்களிடையே மதிப்பு இருக்கிறதா, இல்லையா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்பது தெரிகிறது. தாக்குதல், நேரடியாகக் கூடாது என்பதே இதுவரை நமக்கு வந்துள்ள கடிதங்களின் கருத்தாகும்.

* * *

உண்மையில் இரண்டாவது இதழில் வெளிவந்த . தாக்குதல்கள்—நேரடியானவை —மக்களின் மனப்பான்மையை அறிந்து கொள்ளச் செய்யப்பட்ட முயற்சியே தவிர வேறில்லை. முதல் இதழ் நளினமாகவும், இரண்டாவது இதழ் கோபாவேசமாகவும் இருந்ததற்கு இதுதான் காரணம். நயமும் நளினமும் நமக்கே உரித்தானவை; எனவே தென்றலின் பாதையும் நிச்சயமாக அப்படித்தான் இருக்கும்.

* * *

மக்கள், தாக்குதலை விரும்பியிருந்தாலும்கூட நாம் அதைப் பின்பற்றுவதாக இல்லை. ஏனென்றால் அரசியல் நாகரீகம் கற்றுத்தந்த அண்ணாவுக்கு தம்பியாக இருக்கும் தகுதியை அது கெடுத்துவிடும். உண்மையைச் சொன்னால், இவ்வளவு நாட்களாக அண்ணா அவர்கள் சொல்லி வந்த, 'கண்ணியம்' நாட்டு மக்களால் எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்தறிய எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிதான், சென்ற இதழில் வந்த தாக்குதல். அடேயப்பா! எவ்வளவு ஒழுங்காக நமது மக்கள் அதைப் பின்பற்றி வருகிறார்கள்! சிறு சொல்லும் தவறாக விழுவதை "ரசிக்க மாட்டோம்" என்று கூறும்வரை அல்லவா பண்பட்டிருக்கிறார்கள்! நல்ல பதிலைக் கொடுத்து, நம்பிக்கையூட்டிய நண்பர்களுக்கு என் நன்றி.

* * *

தாக்குதல் கொடுக்கும் பலனைக் காட்டிலும், கிண்டல் முறை பலன் தரும் என்பதை நான் பல ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்து கொண்டேன்.

அப்போது 1946-ம் ஆண்டு என்று நினைவு — இரண்டாவது எழுத்தாளர் மகாநாடு நடந்து கொண்டிருந்தது. காலையிலிருந்து மாநாடு சகிக்க முடியாத 'போர்' அடித்துக் கொண்டிருந்தது. நாமக்கல் ராமலிங்கம், டி. எஸ். சொக்கலிங்கம், தினமணி வெங்கடாச்சாரி, ஹிந்து ரகுநாதன், சுதேசமித்திரன் சீனிவாசன், நாரண துரைக்கண்ணன் ரா. நாராயணன், பெ. தூரன்; அப்போது கல்வி அமைச்சராக இருந்த அவினாசிலிங்கம், ப. ஜீவானந்தம், ம. பொ. சிவஞானம், கல்கிப்பத்திரிகையின் உதவி ஆசிரியர்கள், மற்றும் பல எழுத்தாளர்களும் அந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். எல்லோரும் வழ வழவென்று வெண்டைக்காயோடு விளக்கெண்ணையைச் சேர்த்தது மாதிரி பேசி தலைவலியை வரவழைத்தனர். தொழர் நாமக்கல் ராமலிங்கம், 'ராகவன் என்பவன் ராஸ்கேல் ஆனான்' என்று பாட்டு எழுதுகிற 'தனக்கே உரித்தான' பாணியிலே 'ஆரியமாவது திராவிடமாவது' என்று, தான் எழுதியதைப் படித்து, எழுத்தாளர்கள் "போதும்!" என்று சப்தம் போட்டபிறகே நிறுத்தினார். திடீரென்று கொட்டகை அதிர்ந்தது. கைதட்டல் ஓய பத்து நிமிடம் பிடித்தது. ஒருவேளை நாமக்கல்லாருக்குத்தான் இந்தக் கை தட்டுதலோ என்று நான் ஆச்சரியப்படும் சமயம், அண்ணா வந்தது தெரிந்தது. அதுவரை அண்ணாவை நான் நேரில் பார்த்தது கிடையாது. நான் இயக்க ஆதரவாளன்கூட அல்ல. ஆனால் இவ்வளவு ஆரியர்கள் இருக்கிற இடத்திலே நமக்கொரு தலைவர் வந்து விட்டார் என்கிற மாதிரி ஒரு தெம்பு ஏற்பட்டது. மனதில் ஒரே உற்சாகம். கைதட்டுவதில் முன்னின்று உற்சாகம் காட்டியவர், தோழர் சிவஞானம்தான் என்றால் யூகித்துக் கொள்ளுங்களேன். (அப்போதுதான் நாரதர் சீனிவாசராவுடன் சண்டை போட்டு "இழிந்த பார்ப்பான்! பார்ப்பான்!" என்று திட்டிவிட்டு ஓய்ந்திருந்தார், ம. பொ. சி.)

அண்ணாவைப் பேசச் சொல்வார்களா, மாட்டார்களா என்று மாநாட்டில் இருந்த பார்ப்பன

> கடந்த, இரண்டு இதழ்களையும் பற்றி, நண்பர்கள் எழுதிய அபிப்பிராயங்களுக்கு விளக்கம்தான் இந்தக் கட்டுரை, ஆஹா! மக்கள் மனம், எவ்வளவு உயர்ந்த தன்மைக்குப் பண்பட்டிருக்கிறது!
>
> —கண்ணதாசன்

ரல்லாத எழுத்தாளர்களுக்குள் சலசலப்பு வந்தது. விஷயம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமலேயே "அண்ணு பேச வேண்டும்! பேசச் சொல்லுங்கள்!" என்று சப்தம் போட ஆரம்பித்தோம். ஹிந்துஸ்தான் நாராயணன் உடனே 'மைக்' அருகில் வந்து "அண்ணுத்துரை கண்டிப்பாகப் பேசுவார்" என்று அறிவித்தார், ஒரே கைதட்டல்! (இத்தனைக்கும் திராவிட இயக்கத்து எழுத்தாளர்களே அதில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.)

பிறகு தோழர் அவினுசிலிங்கம் "ஆண்டவன் அருளாலே........" என்று ஆரம்பித்து, ஆயிரம் ஆண்டவன் போட்டுப்பேசி முடித்தார். பிறகு அண்ணு பேச வந்தார்.

"தோழர்களே! பெரியோர்களே! தலைவர் அமைச்சரைக் கூப்பிட்டுவிட்டு அமர்ந்தார்; அமைச்சர் ஆண்டவனைக் கூப்பிட்டுவிட்டு அமர்ந்து விட்டார். அமைச்சர் விரும்பும் ஆண்டவன் அருள், வேண்டி வருவதல்ல. ஏன், நாமக்கல் கவிஞர்கள் போன்ற பக்தர்கள் இருக்கும் இடத்தில் ஆண்டவன் அருளுக்குக் குறைவா என்ன!.......

......எழுதுவதென்ருல், இனி வியாசரைப்போல் எழுதிஞன் என்று கூறிவிடாதிர்கள்; டி. எஸ். சொக்கலிங்கத்தைப்போல் வீரமாக உணர்ச்சியோடு — எழுதிஞன் என்று கூறுங்கள்......."

குறைந்த வரிகளே கூறியுள்ளேன், அவர் பேசியதில். ஒவ்வொரு வரியையும் படித்துப் பாருங்கள். நயமான சூடு—கிண்டல்—யார் இதில் தவருன வார்த்தைகளைக் காணமுடியும்?

நாமக்கல்லார் தலையைக் குனிந்தபடி இருந்தார்: சொக்கலிங்கம் உச்சி குளிர்ந்து உட்கார்ந்திருந்தார்; அமைச்சர் அவினுசி ஓடிவந்து அண்ணுவைக் கட்டிக்கொண்டார்! (இதிலிருந்துதான் சிவஞானத்தின் பொருமையும் ஆரம்பம் என்பதையும் கூருமல் முடியாது)

* * *

இதுபற்றி 'சக்தி' காரியாலயத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது பெரியார் வ. ரா. குறிப்பிட்டார். "சண்டாளனையா அண்ணுத்துரை! ஒவ்வொரு வரியிலேயும் கொன்னு கொன்னு தூக்கி எறிஞ்சான்!" என்று, இப்போது 'மஞ்சரி' ஆசிரியராயிருக்கும் தி. ஜ. ர. மஞ்சரி ஈஸ்வரன் ஆகிய எழுத்தாள நண்பர்கள் அப்போது உடனிருந்தனர்.

* * *

ஆக, கிண்டல் அளிக்கும் பலனைக் கண்ணுலே கண்டவன் நான். எத்தனை பேர் மனதை அது மாற்றியது என்பதையும் அறிவேன். தாக்குதலில் நேரடி முறை, பலவீனத்தைக் குறிக்கும் என்பது எனக்குப் புரியும். "அண்ணு வழியே திண்ணிய வழி" எனத் தொடர்வதற்கு, நண்பர்களின் கடிதங்கள் எனக்கு வழிகாட்டி விட்டன.

* * *

நிற்க; முதலாவது இதழில் நமது இயக்கப் பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது முக்கியமான மூன்று பத்திரிகைகளை மறந்து விட்டமை குறித்து வருந்துகிறேன்.

வில்லாளனின் 'தம்பி'—பூமாலை, தூத்துக்குடி 'கிளர்ச்சி' தோழர் கண்ணனின் "பகுத்தறிவு" ஆகியவையே அப்பத்திரிகைகள். இந்தப் பத்திரிகைகளின் சிறப்புப்பற்றி அதிகம் கூறுவது, "பூக்கடைக்கு விளம்பரம்" போடுவதாக முடியும். காரணம் எல்லாத் தோழர்களும் ஆவலோடு படிக்கும் பத்திரிகைகள் மேற்கண்டவை. இயக்கத்தின் முன்னேடும் பிள்ளைகளில் இவை முக்கியமானவை என்பதை மறுக்க முடியாது. *

—கண்ணதாசன்

அச்சு இயந்திரக் கதை

அச்சு தோன்றியதைப் பற்றி ஒரு கதை உண்டு.

பைபிளை ஆதிகாலத்தில் கையினுல் எழுதி எழுதி விற்பது வழக்கம். ஆனுல், பாரிஸில் டாக்டர் பாஸ்ட் என்பவர் முதன் முதலாகப் பைபிளை ரகஸ்யமாய் அச்சிட்டு, கையெழுத்துப் பிரதிகளை மலிவாகவும், ஏராளமாகவும் விற்கத் தொடங்கினுர்.

இப்படி அவர் விற்கத் தொடங்கிய உடனே ஜனங்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. "யார் இவ்வளவு பிரதிகளை இவ்வளவு விரைவாய் இவருக்கு எழுதிக் கொடுக்கிருர்கள்? இவ்வளவு மலிவாய் இவர் எப்படி விற்க முடிகிறது? இது ஏதோ பிசாசின் வேலையாய்த்தான் இருக்க வேண்டும்" என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள்.

அந்தக் காலத்தில் மேல் நாட்டில் பிசாசு உபாசனை உள்ளவன் என்று யார் மேல் சந்தேகம் வந்தாலும், அவனுக்கு மரண தண்டனை விதித்து விடுவார்கள். ஆகையால், டாக்டர் பாஸ்டையும் உயிரோடு எரித்துவிட வேண்டுமென்று பிரெஞ்சு சர்க்கார் தண்டனை விதித்துவிட்டார்கள்.

தாம் உயிர் தப்புவதற்காக, தமது அச்சு இயந்திர விவரங்களை, டாக்டர் பாஸ்ட் பிரெஞ்சுப் பார்லிமெண்டுக்குக் காட்டினுர். அதிலிருந்து அச்சு இயந்திரம் எங்கும் பரவி, எல்லோருக்கும் உபகாரமாயிற்று.

இது உண்மைச் சரித்திரமல்ல வாயினும் ரஸமாயிருக்கிறதல்லவா?

பாஷையின் உபத்திரவம்!

கெலெட் நெபே என்ற ஒரு புடாபெஸ்ட் டாக்டர் பின்வருமாறு கூறுகிருர்:—

நான் பல வருஷங்களாகத் தொழில் புரிந்து வருவதிலிருந்து, ஒரு விஷயம் அறிந்து கொண்டிருக்கிறேன். கையாள மிகக் கஷ்டமான சாதனம் பாஷையே என்ற படிப்பினைதான் அது. ஒரு நோயாளியை "உங்கள் வயதென்ன?" என்று நான் கேட்டேனுல், 1879-ஆம் வருடம் ஜுன் 29-ந் தேதி" என்று அவர் பதிலளிக்கிருர். அவருடைய பெயரைக் கேட்டால் "என் பெயரா?" என்று ஆச்சரியத்தோடு அவர் கூவுகிருர். "குப்புறப் படுத்துக்கொள்ளுங்கள்" என்ருல், அவர் மல்லாக்கப் படுத்துக்கொள்ளுகிருர், "வாயைத் திறவுங்கள்" என்ருல் அவர் கண்களை மூடிவிடுகிருர். "காலைச் சேர்த்துககொண்டு நில்லுங்கள்" என்ருல், அவர் முட்டிக்கால் தட்டுகிருர். இத்தனை தொல்லையோடு பரிட்சித்து முடிந்ததும், "பத்து ரூபாய் கொடும்" என்று கேட்டால், அவர் ஐந்து ரூபாய் கொடுக்கிருர். பாருங்கள், அவருக்குத் தமது சொந்த பாஷையே தெரியவில்லை; என்ன செய்வது?

புரவி

கயிறுருவிப் போச்சே!

—○—

கோபம் வந்தால் திட்டுவது, உணர்ச்சி வசப்பட்ட சாதாரண மனிதர்களின் செய்கை என்பார்கள் பெரியவர்கள். ஆனுல் நல்ல புலமை வாய்ந்தவர்க்கும் இது இயல்பாக இருந்திருக்கிறது! வராத வார்த்தை கூட அவர்கள் வாயில் வந்திருக்கிறது! நாம் வசனத்தில் திட்டுகிறேம்; அவர்கள் கவிதையில் திட்டியிருக்கிருர்கள்—இவ்வளவுதான் பேதம்!

காளமேகம், கும்பகோணத்தில் ஒரு சமாராதனையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தானும். எதிரே ஒரு சோழநாட்டுப் பார்ப்பனன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தானும். அந்த சோழியப் பார்ப்பனனின் முன் குடும்மி அவிழ்ந்து அவனது இலையிலேயே விழ, அதில் சோறு ஒட்டிக் கொள்ள, அந்தப் பார்ப்பனன் குடுமியைத் தூக்கி உதற, சோறு தெரித்து காளமேகத்தின் இலையில் விழுந்து விட்டது, கோபம் வந்துவிட்டது காளமேகத்துக்கு. தாக்குதாக்கென்று தாக்குகிருன்;

சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா! புலையா!—திருக்குடந்தைக்
கோட்டானே! நாயே! குரங்கே! உனை ஒருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்!
போட்டாளாமே 'தொப்'பென்று!

இவனுக்கு அக்காள் ஔவையார்! உறவில் அல்ல; வசவில்! யாரோ ஒருவன் (கம்பன் என்பாரும் உளர்) அவளைப் பார்த்து சிலேடையாக

"ஒரு காலடி; நாலிலைப் பந்தலடி!"

என்ருனும் ஆரைக்கீரையைக் குறிப்பது போல. அதில் இருந்த "அடீ!" என்ற அழைப்பு ஔவையின் கோபத்தை மூட்டி விட்டது. "நீ சொன்னது ஆரைக்கீரையைத்தான்" என்று சொல்ல வந்தவள், வாயாரவைது, மூச்சுக்கு முன்னூறு "அடாபுடா" போட்டுப் பாடுகிருள்:

எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னுயடா!

"அட அவலட்சணமே! எருமைமாடே! கழுதையே! குட்டிச் சுவரே! குரங்கே! நீ சொன்னது ஆரையடா! டேய்! டேய்!

—பங்கி அடிச்ச சாமியாரோடு, சென்னை ரௌடி சண்டை போடுவதுபோல் இல்லையா?

கிழவி ; இது என் மகனின் போட்டோப்படம். நீங்கள் இதைப் பெரிது செய்து தர முடியுமா?
ஸ்டியோ மானேஜர் : மு
கிழவி ; அவன் தலையில் குல்லாயை எடுத்துவி
யுமா?
ஸ்டுடியோ ம
படியே செ
ஆனால்.
வா

எண்ணம்

கண்ணதாசன்

வட ஆற்காடு மாவட்ட வாக்காளர்களுக்கு இப்போது பெரிய சோதனை பிறந்திருக்கிறது. குடியேற்றம் தொகுதிக்கு நடைபெறும் உபதேர்தலில் அவர்களது கணிதம் என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டியவர்களாயுள்ளனர். மற்ற உபதேர்தலைக் காட்டிலும் குடியேற்றம் உபதேர்தலுக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டு விட்டதற்குக் காரணம், இம் மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பவர், தன் ஜனநாயகத் தலைவிதி'யை அங்கே நிர்ணயித்துக் கொள்ள வேண்டியவராயிருக்கிறார் என்பதுதான்.

* * *

குடியேற்றம் தொகுதியில் காமராஜருக்கு எதிராக ஒரு கம்யூனிஸ்ட் போட்டி யிடுகிறார். இதில் நாமினேஷன் பத்திரம் தாக்கல் செய்திருந்த ஒருவர் சுயேச்சை. அவர் வாபஸ் வாங்கிவிட்டார். போட்டியிடுபவர்கள் தேர்தலில் எந்தக் கொள்கையின் மீது போட்டியிடுகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் ஜனநாயக அடிப்படையில், வெற்றி பெறுவதற்கு, தங்கள்கொள்கைகளை விளக்கிக் கூறி, மக்களை கவர்ந்தாகவேண்டும், இந்த இருவரும். மக்கள் அந்தக் கொள்கைகளை ஒப்பினால்—ஒருவர் கடைப்பிடிக்கும் கொள்கைகளைக் காட்டிலும் மற்றவை உயர்ந்தவை என நம்பினால்-அல்லது,காமராஜரின் கொள்கையே இவர்களும் தங்களதாக்கிச் சொல்லி, அவரைக் காட்டிலும் தாங்கள் அந்தக் கொள்கைகளை செயல் படுத்த முடியும் என்று சொல்லி, அதை மக்கள் ஏற்றுக் கொண்டால் — இந்த ஒருவர் வெற்றி பெற முடியும். ஆனால் இவர்கள் எந்தக் கொள்கைகளை முன் வைக்கிறார்கள் என்பது இன்னும் விளங்கவில்லை.

* * *

சாதாரணமாக, "எதிர்க் கட்சிமனோபாவம்" என்கிற கண்ணோட்டத்தோடு பார்த்தால், இந்த ஒருவர் வெற்றி பெறுவதைத்தான் முன்னேற்றக் கழகம் விரும்ப வேண்டியிருக்கும் ஆனால், அடிப்படைப் பிரச்சினைகளையும், சமீப காலத்தில் நாட்டைக் குலுக்கி எடுத்து, காமராசரால் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும் பிரச்சினைகளையும் வைத்து, 'பொது நலம்' என்கிற பரந்த கண்ணோட்டத்தோடு பார்த்தால், காமராசரின் வெற்றியையே முன்னேற்றக் கழகம் விரும்பவேண்டியிருக்கும்.

* * *

சேற்றில் இருப்பது ஒன்றுதான் செந்தாமரைக்குக் களங்கம் ; சிப்பியில் இருப்பது ஒன்றுதான் முத்துக்குக் களங்கம் ; நாகத்தின் வாயில் இருப்பது ஒன்றுதான் ரத்தினத்துக்குக் களங்கம்—காங்கிரஸில் இருப்பது ஒன்றுதான் காமராஜருக்குக் களங்கம். வகைப் படுத்திப் பார்த்தால் இதைத் தவிர அவர் மீது யாரும் குற்றம் சாட்ட முடியாது—தோற்று ஓடிப்போன ஆச்சாரியார் கும்பலைத் தவிர! ஏழை; ஏழைகள் கூட்டத்திலேயே பழகியவர் உழைப்பாளி ; சொத்சுகம் தேடாதவர்—இவ நேர்மையுணர்ந்த எந்த இயல்வாதியும் காமராச குச் சூட்டும் பெயர்க காமராசர் இவ்வளவு உத்தமராயிருந்தும், களங்கம் மிகுந்த காங்கிரஸில் அங்கம் வகிக்கிறாரே என்று எல்லோரும் வருந்துகிறார்கள் ; நாமும் தான்! ஆனால் அதற்காக அவரது குணங்களை—ஒழுக்கத்தை — நேர்மையை மறந்து பேசிவிட முடியாது.

* * *

குடியேற்றம் தேர்தலைக் கீழ்ப்பாக்கம் உன்னிப்பாகக் கவனிக்கிறது. "காமராசர் தோற்பாரா? தோற்றால் டெல்லிக்குக் காவடி எடுத்து பழையபடியும் ஆச்சாரியாரை உள்ளே நுழைத்து விட முடியுமா" என்றெல்லாம் இரவு பகலாகக் கண் விழித்துத் திட்டம் திட்டப் படுகிறது, கீழ்ப்பாக்கத்திலே. காமராசரின் மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் ஓரிருவர் கூட இந்த 'கீழ்ப்பாக்க வேலை'யில் பங்கெடுத்துக் கொள்வதாகக் கூறப் பட்டால் நாம் ஆச்சரியப்பட மாட்டோம். காமராஜர் குடி

வெற்
"பார்த்தி
திட்டத்தை
மக்கள் கோபப்பட
புறத்தள்ளி விட்டா
மகான் ராஜாஜியையே
கள் விரும்புகிறார்கள்!" என்றெல்லாம் 'அவாளை' தம் பட்ட மடித்து, கல்வித் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்த நம்மையும் சேர்த்துப் பரிகசிக்க முடியும். இந்தத் தேர்தலில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான கட்டம் இது. **கல்வித் திட்டப் பிரச்சினையில் தேர்தல் முடிவு நிற்குமானால்—பகிரங்கமாக நாம் காமராஜரை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.**

* * *

இந்தத் தேர்தல் உண்மையிலேயே சிக்கலைக் கிளப்பி விட்டிருக்கிறது. ஆளை நினைத்தால் ஆதரிக்கத் தோன்றும் ; கட்சியை நினைத்தால் எதிர்க்கத் தோன்றும். ஆள்—நல்லவர் ; கட்சி களங்கம் மிகுந்தது. காங்கிரஸை எதிர்ப்பவர்கள் காமாராஜரை எதிர்த்துத் தான் ஆகவேண்டும் ; உயர்ந்த மனிதப் பண்பை மதிப்பவர்கள் காமராஜரை ஆதரித்துத்தான் தீரவேண்டும். என்ன செய்வது என்பது வாக்காளர் குழப்பம்.

4-ம் பக்கம் பார்க்க

இணையற்ற 2-வது வாரம் 2—7—54 முதல்
★ சேலம் பேலஸில் ★
தினசரி 2 காக்ஷிகள்
பிரதி, சனி, ஞாயிறு, அமாவாசைகளில் மாட்னி உண்டு
அற்புதமான நாட்டிய விருந்து, செவிக்கினிய கானம், தெவிட்டாத கதைப் போக்கு, அத்தனையும் நிறைந்த அற்புத கலா சிருஷ்டி!
வைஜயந்திமாலா, அஞ்சலிதேவி, கணேஷ், பாலச்சந்திரன், சாரங்கபாணி நடித்தது.
ஏ. வி. எம். பெண்
டைரக்ஷன் : எம். வி. ராமன்

சென்னைக்கு
விற்பனையாளர்
சதரன் நியூஸ் கம்பெனி
G. N. சாமி,
183, மவுண்ரோட்
சென்னை-2.

நண்பர் ஒருவரின் திருமணத்திற்கு அனுப்பப்பட்ட வாழ்த்துக் கவிதை இது............

''டாய் தும்பீ!

''ணதாசன்

டும்
ின்று
'னர்! —
[அதனுல்

...மறை! —ஆயின்
...ம்வ சுகமென
... தூய்மையும் தோயுந் தமிழன்
த கூருய்! கூருய் தும்பீ!

இரவும் பகலும் சுழற்சியில் தோன்றினும்
இது இரா, இதுபகல் எனும் நினைவின்றி
உறவும் உரிமையும் ஊடலும் நாடலும்
உயிர் உடல் கொள்கெனப் பாடாய் தும்பீ!

உயர்மலை முகட்டில் ஊறும் பனித்துளி
உயிர்தரும் நன்னீர் ஆய் அம் மலைக்கீழ்
மடி விரித்திருக்கும் மண்ணிலே ஊர்வபோல்
வாழ்கெனப் பாடாய்! பாடாய் தும்பீ!

குயிலும் மயிலும் நிலவுந் தென்றலும்
கோடிநாள் புலவர் கூறிடும் வார்த்தைகள்
குயில்மொழி மயில்நடம் குளிர்பூந் தென்றல்
குடும்பந் தானெனக் கூருய் தும்பீ!

ஆவொடுங்க... ...டும் முல்லை
பாவொடும் நல்லிசை காவொடும் தென்றல்
பூவொடும் தேனீ, பொன்னெடும் நல்லொளி
மேவிடும் வாழ்வுறப் பாடாய் தும்பீ!

பாடாய் தும்பீ மணவரைப் பாட்டு!
பாடாய் தும்பீ மலரணைப் பாட்டு;
பாடாய் தும்பீ மழலையின் பாட்டு!
பாடாய் தும்பீ நாடெல்லாங் கேட்க!

இப்போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இது தான்:

"ஆச்சாரியார், தன் கொஞ்ச நாள் வாழ்விலே செய்த அட்டூழியங்கள், பண்ணி வைத்த கோலங்கள் நாட்டு மக்கள் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை.

காமராஜர் அந்தக் களங்கத்தைத் துடைத்தார் என்பதும் நம் நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

காமராஜரின் வீழ்ச்சியை ஆச்சாரியார் குழு எதிர்பார்க்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

இந்த மூன்றையும் கூட்டிக் கழித்துப் போட்டுப் பார்த்தால், வாக்காளர்களுக்கு விபரம் புரியும்.

* * *

புரட்சிகரமான எதிர்க் கட்சியாகிய கம்யூனிஸ் கட்சியின் அபேட்சகரை நீ ஏன் ஆதரிக்கவில்லை?"

என்று யாரும் நம்மைக் கேட்க முடியாது. காரணம் நடைமுறையில், நம்மைப் பொறுத்தவரையில், காங்கிரஸை விடக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த விதத்திலும் உயர்ந்தது என்று கூற முடியாது.

* * *

"சுயேச்சையை நீ ஏன் ஆதரிக்கக் கூடாது!" என்று யாரும் நம்மைத் துணிந்து கேட்கமாட்டார்கள். காரணம், அவர் தானுகவே வாபஸ் வாங்கி விட்டார்.

* * *

சுருக்கமாகச் சொன்னுல், விஷயம் இதுதான்:

"காமராஜரின் வெற்றி கழகத்தின் வெற்றியாகாது; ஆனுல் காமராஜரின் தோல்வி நிச்சயமாகக் கழகத்தின் தோல்வியாக முடியும்!"

இலக்கியத்தில் காதல்

காரை—முத்துப் புலவர்

போர் முடிந்துவிட்டது; வீரர்கள் திரும்பி விட்டனர்; வீட்டுக்கு வருகின்றனர். ஆனால் அவர்கள் திரும்பு முன்னரே நகருக்குச் செய்தி வந்துவிட்டது, வீரர்கள் திரும்பிக்கொண்டிருப்பதாக! காலம் தாழ்த்தியே வீரர்கள் வந்தனர்! ஊடல் பிறந்தது, மங்கையருக்கு! கதவைத் தாழ் இட்டனர்; திறக்க மறுத்தனர். கணவர்கள் காத்திருந்தனர்; அழைத்தனர் — எப்படி? பல நாளையக் காதல் நிகழ்ச்சிகளைச் சொல்லி! "அப்படியிருந்த மங்கையே! இப்படி இருந்தவளே!" எனப் பலவாறு! நடந்தவற்றைக் காட்டிலும் அவற்றை நினைவு படுத்திப் பார்ப்பதில் தான் இன்பம்!

ஒருவன், தன் காதலியை—இன்னும் கல்யாணம் ஆகவில்லை—அழைக்கிறான்; கதவைத் திறக்கச் சொல்கிறான். என்ன சொல்லி அழைக்கிறான்?

"அழகிய கழுநீர்ப் பூவைப் பறிக்கும்போது, 'முதிராத இளைஞரின் உயிரையும் சேர்த்துப் பறித்து, திருகி எடுத்து, சொருகும் மங்கையே! கதவைத் திற!"

முதிராத இளைஞர்—அனுபவமில்லாதவர்–வாணஜாலங்களைக் கண்டே துடிக்கும் பருவம்—அவர்கள் உயிரைச் சேர்த்துத் திருகி எடுக்கின்றாளாம்!

முருகிற்சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழன்மடவீர்!
செம்பொற் கபாடம் திறமினோ!

* * *

இன்னொருவன் வீட்டுக்கு வந்தான்; கதவைத் தட்டினான்:

"ஏ மங்கையே! என் மனையாளே! உதட்டிலிருக்கும் சிவப்பு, கண்ணுக்குப் போக, கண்ணிலிருக்கும் வெளுப்பு உதட்டிற்கு வர, சுகமளிக்கும் தோகையே! கதவைத் திற!"

—சிவப்பு உதட்டின் இயற்கை. இவன் ஒரு நாள் இரவில் முத்தமிட்டு முத்தமிட்டு, வாய்ச் சிவப்பு அற்றுப்போய் வாய் வெளுத்து விட்டதாம்; கலந்த மயக்கத்தில் உணர்ச்சி வசப்பட்டு, கண்கள் சிவந்துபோய் விட்டனவாம். இயற்கையான நிலை இடப்பரிமாற்றம் ஆகிவிட்டதாம். கற்பனைதான்; ஆனால் எவ்வளவு பொருத்தம்!

வாயிற் சிவப்பை விழிவாங்க,
மலர்க் கண்வெளுப்பை வாய்வாங்க
தோயக்கலவி அமுதளிப்பீர்!
துங்கக் கபாடம் திறமினோ!

* * *

இரவில் கண்ட இன்ப உறவுக்குப் பின், அந்த ஆனந்த மயக்கத்தில் தன் கணவனின் மார்பிலேயே முகத்தை வைத்துத் துயில் கொண்டாளாம் ஒரு பெண், பொழுது விடிந்தது; ஆனாலும் அவள் விழிக்கவில்லை. அதைச் சொல்லியே அவள் கணவன் கதவைத் திறக்கச் சொல்லுகிறான்:

போக அமளிக் கலி மயக்கில்
புலர்ந்த தறியா தேகொழுநர்
ஆகவமளி மிசைத்துயில்வீர்!
அம்பொற் கபாடம் திறமினோ!

[போக அமளி - இன்பப் படுக்கை; ஆக அமளி – மார்புப் படுக்கை]

* * *

இந்த மூன்று பாடல்களும் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார்; கடைதிறப்புப் பகுதியில் கூறும் பாடல்கள்!

வீரர்கள் ஆவலோடு—வெகு நாள் தனித்திருந்த தாகத்தோடு—திரும்புகிறார்கள் என்பதை இதன்மூலம் குறிக்கிறார் புலவர். மனோதத்துவத்தோடு கூடிய இந்தப் பகுதியில் சகல ரகசியங்களையும் கூறியிருக்கிறார் செயங்கொண்டார் எனக் கசந்து சொல்வர் சிலர். அவர்கள் உண்மை புலமையை மதிக்காதவர்கள்—புரியாதவர்கள் என்றுதான் கூற வேண்டும்.

கலிங்கத்துப் பரணி ஆண்டவன் கதையல்ல; மனிதர்கள் பற்றியது. மனித மனம் பூரணமாகத் தெரிந்தால்தான் புலமை முழுமையடையும்.

* * *

ஆண்டவனைக் கண்டு சில பெண்களுக்குக் காதல் ஏற்பட்டதாம். பக்திக் காதலா? இல்லை; முழுக்க முழுக்க சக்திக் காதல்—அதுவும் அளவு மீறிய காதல்!

வீதியிலே குற்றால நாதரின் ஊர்வலம் வந்ததாகக் கவி கற்பனை செய்கிறார். அதைப் பார்ப்பதற்காகப் பெண்கள் அலங்காரம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அதற்குள் ஊர்வலம் வந்துவிட்டது. பெண்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு கையிலே வளையல் சூடிய பெண், மறுகைக்கு சூட மறந்து ஓடுகிறாள்! ரவிக்கையை எடுத்துக் கொண்டு ஒருத்தி, சேலை என்று நினைத்துக் கட்டப் போகிறாள். பிறகு ரவிக்கை என்று மார்பிலே சூடுகிறாள்! இவன் நிற்கமாட்டானா, காதல்பேசமாட்டானா என்று எல்லோரும் துடிக்கிறார்கள்:

ஒரு கைவளை பூண்டபெண்கள்
ஒரு கைவளை பூணமறந்து,
ஓடுவார்; நகைப்பவரை நாடுவார்; கவிழ்வார்!

இருதனத்து ரவிக்கைதனை
அரையிலுடை தொடுவார்; பின்
இந்த உடை ரவிக்கையென
சந்த முலைக்கிடுவார்!

—குற்றாலக் குறவஞ்சியில் சொட்டும் இந்த ஆண்டவரசத்தைப்போல, கலிங்கத்துப் பரணிக் காதல் இயற்கைக்கு மாறுபட்டதல்ல.

*

பணக்காரப் பிச்சைக்காரன்?

லட்சுமணபுரியிலே, சுட்டன் என்ற பிச்சைக்காரன், மகன்லால் என்ற மற்றொருவன் மீது ஒரு வழக்குத் தொடுத்தான்.

பிச்சைக்காரச் சுட்டனின் வழக்காவது: "நான் ரோட்டிலே போயிட்டிருந்தேனுங்க. மகன்லால் வந்து என்னை அடிச்சு, என் கையிலிருந்த கப்பறையை, அதிலிருந்த பணத்தோடே பிடுங்கிக் கிட்டுப் போயிட்டானுங்க. ஒரு நாள் சம்பாத்தியம் பூராவையும் பறிச்சுக் கிட்டானுங்க."

பிச்சைக்காரச் சுட்டனின் ஒரு நாளைய வருமானம் 40 ரூபாயானால்......!

வனவாசியின் ஆச்சர்யம்!

சென்ற ஐரோப்பிய மகா யுத்தம் நடந்துகொண்டிருந்ததே அப்போது, பிரானிஸ்டா மலினோஸ்கி என்ற ஒரு ஐரோப்பியர் ஒரு வனவாசியைச் சந்தித்தாராம்.

"ஆமாம். இத்தனை மனிதர்களை வெள்ளைக்காரர்கள் எப்படிச் சாப்பிடுகிறார்கள்?" என்று அவன் ஆச்சரியத்தோடு இவரைக் கேட்டான்.

"சாப்பிடுவதா? தங்களால் கொல்லப்பட்ட பகைவர்களை வெள்ளைக்காரர்கள் சாப்பிடுவதில்லை" என்று இவர் பதிலளித்தார்.

"அப்படியா! என்ன காட்டுமிராண்டிகள் இந்த வெள்ளைக்காரர்கள்! பிரயோசனமில்லாமல் எதற்காகக் கொல்லுகிறார்கள்?" என்று அவன் அதிசயித்தானாம்.

★ அடுத்த இதழில் ★

சிவாஜி மன்னனை, ஔரங்கசீபின் மகள் காதலித்ததாக—மையல் கொண்டதாக—ஒரு வரலாறு கூறுகிறது. ஜாதுநாத் சர்க்கார் எழுதிய வரலாறு, சிவாஜியின் குமாரன் சாம்பாஜியை அவள் காதலித்ததாகக் கூறுகிறது.

இது சிவாஜியைக் காதலித்ததாக உள்ள ஆதாரத்தைக் கொண்டு எழுதப்பட்டது.

காட்சி 1

ஔரங்கசீப் தர்பார்

[தர்பாருக்கு இரு புறமும் நேர் வரிசையிலே பிரதானிகள், சிற்றரசர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஔரங்கசிப்புக்குப் பின்னால் ஆலவட்டம் வீசுவோர், சிம்மாசனத்தின் முன்னால் இரு சேவகர் ஆயுதமில்லாமல் ; ஔரங்கசிப்புக்கு வலப் பக்கத்தில் ஜெபுன்னிஸா உட்கார்ந்திருக்கிறாள். ஔரங்கசீப் உட்கார்ந்திருப்பது மற்ற சிம்மாசனங்களைப் போல அல்ல. சேட்டுகள் உட்கார்ந்திருப்பது போன்ற பெரிய, கனத்த மெத்தை! பின்புறமும், வலப்புறமும், இடப்புறமும் உருண்டு நீண்ட தலையணைகள். ஹுக்கா கிடையாது !]

(ஜாபர்கான் எழுந்து பேசுகிறான்.)

ஜாபர்: *பாதுஷா வாழ்க! டில்லி மகுடம் தழைப்பதாக! வீரர் பெருமக்களே! தக்காணத்திலே போரிடச் சென்ற டிலவர்கானும் ஜெயசிம்மனும், சிம்மக்கோட்டையில் சிவாஜியோடு செய்து கொண்ட உடன்படிக்கையின்படி டில்லி மகுடமும் தக்காண ஜாகீரும் சமாதானமாக வாழ்வதிலே பாதுஷாவுக்கு ஆக்ஷேபணையில்லை. வீரன் சிவாஜிக்கு மரியாதை செலுத்தவும், விரும்பிய வண்ணம் ஜாகிர்கள் கொடுக்கவும், வீர விருதுகள் வேண்டியன தரவும் பாதுஷா ஔரங்க சீப் அடங்காத ஆவல் கொண்டிருக்கிறார். அந்த ஆவலை சிவாஜியின் முன்னிலையில் வெளியிடவே இந்தச் சபை கூடியிருக்கிறது ! வாழ்க பாதுஷா !*

[வீரனை வரவேற்கும் வாத்ய ஒலி கேட்கிறது. சிவாஜி தர்பாருக்குள் நுழைகிறான், பக்கத்திலே ராமசிம்மனும் வருகிறான்.]

ஔரங்: *(சாய்ந்தபடியே) வருக சிவாஜி மன்னா ! வாழ்க நின் வீரம்! மராட்டிய மாவீரனை வரவேற்பதிலே இந்தக் கொலு மண்டபம் பெருமை அடைகிறது! புரந்தரக் கோட்டையில் நீ காட்டிய தீரமும், சிம்மக் கோட்டையில் நீ காட்டிய வீரமும் மெச்சத் தகுந்தது! தக்காண ரத்தினமே வாழ்க! அமர்க !*

(என்று இரண்டாந்தர மன்னர்கள் உட்காருமிடத்தைக் காட்டுகிறான். சிவாஜி அந்த ஆசனத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு அலட்சியமாகச் சிரித்து.)

சிவாஜி: *வரவேற்புக்கு நன்றி பாதுஷா! மகிழ்கிறேன் உங்கள் கொற்றம் காண! பாதுஷா என்னை அமரச் சொன்ன இடம், பணியாளர்கள் அமரும் இடமல்லவா?*

ஔரங்: *இல்லை சிவாஜி மன்னா! அவர்களும் மன்னர்கள் தான்!*

சிவாஜி: *குடி மக்களிடம் வரி வசூலித்து, பாதுஷாவுக்குக் கப்பம் கட்டி, புறப்படு என்றால் புறப்பட்டு, திரும்பி வா என்றால் திரும்பி வந்து, இன்னது செய் என்றால் நல்லது பாதுஷா என்று, செய்தாயா என்றால் ஆமாம் என்று சிம்மாசனத்திலே பொம்மைக் கொலு விருக்கும் இவர்களும் மன்னர்கள்தான்! இல்லையா பாதுஷா! இவர்களின் கட்டளைக்கு ஏவலர்கள் காத்திருப்பர்! பாதுஷாவின் கட்டளையைப் பணிவோடு இவர்கள் கேட்பர்! இவர்களும் மன்னர்கள்தான்! இல்லையா பாதுஷா! போர் வந்து விட்டது, புறப்படு! என்றால் படையைச் சரிபார்ப்பான் படைத்தலைவன்! இந்தக் களத்துக்கு இவ்வளவு படை அனுப்பு என்றால் கட்டளையை சிரமேல் தாங்கி தண்டனிடுவார்கள்! படைத் தலைவனுக்கு இருக்கும் உரிமை கூட இல்லாத இவர்களும் மன்னர்கள்தான்! இல்லையா பாதுஷா !*

ஔரங்: *சக்கரவர்த்தியின் குடை நிழலில் சிற்றரசர்களாயிருப்பவர்கள் எடுபிடிகளாக மாட்டார்கள் சிவாஜி மன்னா! ஔரங்கசிப்பின் தர்பாரிலே அவர்கள் அமர்ந்திருப்பதே அவர்களின் பெருமைக்குச் சான்று! அந்த இடத்திலே நீயும் அமர்வது சிறுமையாகாது!*

சிவாஜி: *பாதுஷா அழைத்த அழைப்புக்கு இணங்கி வந்தது இரண்டாந்தர மன்னருடன் இரண்டறக் கலந்து விட அல்ல! கோழைகள் கூட்டத்திலே ஒரு எண்ணிக்கை கூட்டுவதற்காக அல்ல! பணி செய்து கிடப்பதே பயமற்ற வாழ்வு என்று பக்தி செலுத்தவுமல்ல !*

ஔரங்: *என்ன சொல்கிறாய் சிவாஜி!*

சிவாஜி: *பாதுஷாவின் அரியாசனத் தருகில் சரியாசனம் கேட்கிறான் சிவாஜி மன்னன்!*

ஔரங்: *வீரம் வணக்கத்திற் குறியது! ஆனால் இந்த அரியாசனத்துக்குப் பக்கத்தில் எப்போதுமே சரியாசனம் இருந்தது கிடையாது!*

சிவாஜி: *மன்னிக்க வேண்டும் பாதுஷா! இல்லாத காரணத்தாலேதான் இதே ஆசனத்தை பல பேரும் கவர்ந்திருக்கிறார்கள்!*

ஔரங்: *வீரனென்று மரியாதை செலுத்தினேன்! விவேகத்தை மறந்து விடாதே சிவாஜி!*

சிவாஜி: *மராட்டிய மண்டலத்திற்கு அந்தப் பழக்கமே கிடையாது! மாலவன் பேரன் அதை மறந்ததும் கிடையாது! குன்றுகளிலும், குவிந்து கிடக்கும் காடுகளிலும், ஒண்டி வாழ்ந்த போது கூட விவேகத்தை மறந்தது கிடையாது! சிவாஜிக்கு வீரமோ, விவேகமோ சொல்லித் தெரிய வேண்டிய பாடமல்ல !*

ஔரங்: *(ஆத்திரத்தோடு) சிவாஜி !*

சிவாஜி: *அலட்டிக் கொள்ளாதீர்கள் பாதுஷா! உங்கள் ஆத்திரத்தைக் கிளரவல்ல நான் இங்கு வந்திருப்பது! உங்கள் மகுடத்தின் பெருமையை நான் மறந்து விடமாட்டேன் !*

ஔரங்: *சக்கரவர்த்தி ஜாகீர்தாரை அழைக்க வருவார் என்று கனவு காண்கிறாயா சிவாஜி ?*

சிவாஜி: *வீரனுக்கு மரியாதை செலுத்துவதென்றால் ஆண்டவனே கொஞ்சம் இறங்கித்தான் வரவேண்டும் பாதுஷா! கொலு மண்டபத்திலே அரியணையில் நீங்களும், கீழே நின்று நானும்பேசிக் கொண்டிருப்பது என் வீரத்தை நீங்கள் கௌரவிப்பதாக அர்த்தமா! எனக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை! மரியாதை செலுத்துங்கள் என்றேன்!*

ஔரங்: *நீ கேட்கிற மரியாதை சக்கரவர்த்தி ஜாகீருக்கு செலுத்துகிற மரியாதைதான் என்றால் மறுக்கமாட்டேன்! உன்னை நான் மதிக்கிறேன்! தக்காணத்திலே இன்னும் பல ஜாகிர்களை உனக்கு அளிக்கிறேன்! வேண்டிய விருதுகள் தருகிறேன்! ஜாகீருக்கு ஒருவரை நியமித்துவிட்டு நீ டில்லிக்கு வந்துவிடு. டில்லி சாம்ராஜ்யம் உன் சேவையை எதிர்பார்க்கிறது. உன் வீரத்தை நிலைநாட்ட இதுதான் சரியான இடம்!*

சிவாஜி: *வீரனுக்கு பகையுள்ள இடமெல்லாம் விளையாடும் இடந்தான்! களத்திலே சொரிந்த இரத்தம் சிவாஜியின் காலிலே பட்டு பகைவரின் சிரத்திலே படிந்த கதை தெரியாதா உங்களுக்கு? சூழ்ச்சியால் என்னை மடக்க முயன்ற அப்ஸல்கான் கூட்டத்தைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூளாக்கிய கதையை நீங்கள் அறியீர்களா? விஜயபுரி வீரன் சித்திஜோகர், பனகலக் கோட்டையிலே பட்டபாடு பாரறியுமே பாதுஷா! சினந்துதான் போரிட்டான் சிஷ்டகான்! அவன் திணறி ஓடிய கதை வரலாறாகி விட்டதை நீங்கள் அறியீர்களா? வாளுயர்த்தினான் சிவாஜி என்றால், தாள் பணிந்தனர் பகைவர் என்றுதானே கதை முடிந்திருக்கிறது இது வரை! எத்தனை கோட்டைகளைச் சுற்றி வளைத்தான் சிவாஜி; எது அவனுக்குச் சரியான இடமில்லை இதிலே? கண் எதிரிலே சிவாஜி*

போர்க்கள மரியாதை!

'போர் முனையிலே ஒப்பாரியாவது!' என்று பழமொழி சொல்வார்கள். ஆனால் போர் முனையில் சிலசமயம் நடந்து விடுவதுண்டு. நடந்தால், அதுவே மகா உருக்கமான சம்பவம்.

1745-ஆம் வருடம் பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் நடந்த பாண்டினாய் யுத்தத்தின்போது, ''நீங்களே முதலில் சுடுங்கள்; அப்புறந்தான் நாங்கள் சுடுவோம்'' என்று பிரஞ்சுக்காரரை ஆங்கிலேயர் அழைத்தார்கள்.

"இல்லை ; நீங்களே முதலில் சுடுங்கள்" என்று சொல்லிச் சும்மாவிருந்தார்கள் பிரஞ்சுக்காரர்கள்.

கொஞ்ச நேரம் வரை இந்த மரியாதைப் பரிமாற்றம் நடந்தது. கடைசி வரையில் பிரஞ்சுக்காரர் மசியவில்லை. இங்கிலீஷ்காரர் சுட ஆரம்பித்து, 50 உத்தியோகஸ்தரையும் 760 வீரரையும் கொன்ற பிறகுதான், பிரஞ்சுக்காரரும் பதிலுக்குச் சுடத் தொடங்கினார்கள் !

யின் வீரத்தைக் காணவேண்டுமா பாதுஷா? இதோ! நரசிம்மா! அந்த வாளை இப்படிக் கொடு!

ஔரங்: (சாய்ந்திருந்தவன் ஆத்திரத்தோடு எழுந்து) சிவாஜி!

சிவாஜி: நடுங்காதீர்கள்! நிராயுதபாணிகளை மராட்டிய வீரன் தாக்கமாட்டான்!

ஔரங்: உன்னைக் கைது செய்திருக்கிறேன்! ஜாபர்கான்! வீரனுக்கு ஏற்ற ஒரு மாளிகையை சிறைச்சாலையாக்கி சிவாஜியை அதிலே காவல் வை!

ஸெபுன்: (எழுந்து) இல்லை. கூடாது!

ஔரங்: (அவளைக் கையமர்த்தி) இது ராஜாங்க விவகாரம் ஸெபுன்னிஸா! உட்கார்!

சிவாஜி: சிறைதானே! கட்டுப்பாடும் காவலும் சிவாஜிக்குத் தானே! கூட்டிலடைத்தாலும் குயில் பாட மறவாது! குத்தி வதைத்தாலும் கொல் வேங்கை பணியாது! வாட்டி எடுத்தாலும், மராட்டிய மாவீரன் வணங்கமாட்டான் பாதுஷா! வணங்க மாட்டான்! சிறைச்சாலை வீரனுக்குக் கலைச்சோலை! என்னை சிறையிட்டீர் என்று ஆத்திரப்படவில்லை நான்! ஆனால் சிறையிட்ட முறை, மறைந்திருந்து தாக்கும் கோழைகள் கூடக் கையாளாத முறை! தந்தையைச் சிறையிட்ட தகாத செயலுக்குப்பின் இரண்டாவதான இழிசெயல் இது தான் பாதுஷா!

ஔரங்: கொண்டுபோங்கள்! இதோடு சபை கலைகிறது!

[சிவாஜி கொண்டு போகப்படுதல். எல்லோரும் வெளியேறல்]

[எல்லோரும் போனதும் ஸெபுன்னிஸா எழுந்து தந்தைக்கு முன் நின்று]

ஸெபு: உலகம் நம்மை ஏசும்! மன்னர் குலம் காணாத தவறு என்று பறைசாற்றும்! வரலாற்றிலே இந்த நிகழ்ச்சி கறையாகப் படிந்துவிடும்! வீரமில்லையா நமக்கு? நேர் நின்று போரிடத் துணிவில்லையா? படையில்லையா? பலமில்லையா? தந்தையே! எது இல்லை? இப்படித் தவறான முறையிலே சத்ரபதியைக் கைது செய்வது சாம்ராஜ்யப் பொன்னேட்டில் களங்கமாகாதா?

ஔரங்: சாம்ராஜ்யங்களின் சரித்திரம் உனக்குத் தெரியாது! காட்டை அழித்துத்தான் தோட்டம் போடமுடியும்! களையெடுத்த பின்னால்தான் பயிர் நிலைக்க முடியும்! சவக்காட்டின் மேலேதான் சாம்ராஜ்யம் நிலைக்கும்!

ஸெபு: அன்பும் அறமுமே துணையாகக் கொண்ட பரம்பரைக்கு இந்த அநியாய சாம்ராஜ்யம் எதற்கு?

ஔரங்: எதற்கு என்ற கேள்வியிலே எல்லோருமே விலகிவிட்டால், மனிதகுலத்தைக் கட்டிக் காப்பதுதான் யார்?

ஸெபு: நல்லவர்கள் வரட்டுமே!

ஔரங்: கொடியவன் என்கிறாயா உன் தந்தையை?

ஸெபு: சகிக்கமுடியாத முறைகேடு என்கிறேன்!

ஔரங்: சாம்ராஜ்யங்களின் வரலாறே அதுதான்! உனக்குப் புரியாது! வீணே குழப்பாதே!

ஸெபு: அப்பா! சலவைக் கல் சிலையிலே தளிர்மென்மை கொண்டாற்போல். அழகு சிரிக்கும் அந்த வீரனை மரியாதைக்காவது விடுதலை செய்யக்கூடாதா?

ஔரங்: நான் சொன்னபடி செய்வதானால் மேள தாளங்களோடு திருப்பியனுப்பத் தயார்!

[என்று சொல்லிவிட்டு ஔரங்கசீப் சென்றுவிடல்]
ஸெபுன்னிஸா நின்று ஏதோ ஒரு யோசனை வந்தவள் போல தலையாட்டிவிட்டுச் செல்லல்]

காட்சி 2

கா டு

[பணியாரக் கூடைகள் வந்து இறங்குகின்றன. ஒரு கூடையிலிருந்து சிவாஜி எழுகிறான்—இன்னும் சில கூடைகளிலிருந்து இன்னும் சில வீரர்கள் எழுகிறார்கள்]

சிவாஜி: (கூடைக்காரர்களைப் பார்த்து) வீரர்களே! உங்களுக்கு எப்படி நன்றி சொல்லப்போகிறேன்! என்னைக் கௌரவிக்க உங்கள் பாதுஷாவுக்குத் தெரியாவிட்டாலும் நீங்களாவது உணர்ந்து கொண்டிருக்கிறீர்களே! அதுவே போதும்!

ஒருவன்: இது நாங்கள் செய்த உதவியில்லை சத்ரபதி! இதோ!

[என்று ஒரு கூடையைத் திறக்க, ஸெபுன்னிஸா எழுதல்—எழுந்து கைகூப்பி வணங்குதல்]

சிவாஜி: (பதிலுக்கு வணங்கி) இளவரசியாரா?

ஸெபு: ஆம்! உங்களைக் கைது செய்ததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!

சிவாஜி: நீங்கள் ஏன் மன்னிப்புக் கேட்கிறீர்கள்! மரம் இழைத்த கேட்டுக்கு இலை என்னம்மா செய்யும்?

ஸெபு: ஆனாலும் வலிமிகுந்த தோளும், துயிலாத வாளும், புலி நிகர்த்த குணமும், மலையளவு மனமும் உடைய உங்களை தர்பாரிலே கைது செய்தது தவறுதான்! செய்தது தந்தைதான் என்றாலும் அந்த இரத்தந்தானே நானும்!

[சிவாஜி கைகளைப் பின்கட்டி முன்னும் பின்னும் உலவ, ஸெபுன்னிஸா மேலும்]

ஸெபு: எனக்குத் தெரியும் சத்ரபதியின் வீரம் எத்தகையது என்று! அன்று தர்பாரிலே பார்க்கும் வரையில் உருவத்தை நேரிலே கண்டதில்லை என்றாலும் கற்பனை செய்து பார்க்க என்னால் முடிந்தது! கணவன் உயிருக்காக, மனைவி மன்றாடியபோது தாலிப்பிச்சையளித்த தயாநிதி நீங்கள்! புறமுதுகிட்டான் பகைவன் என்றால் பின்னிருந்து தாக்காத பெரும் வீரர் நீங்கள்! தக்காண மண்ணுக்கு இனி எக்காலமும் அழிவில்லை! உங்கள் பாதம்பட்ட இடமல்லவா அது! பொன்னுக்கு இல்லாத ஒளி உங்கள் மண்ணுக்கு இருக்கிறது இப்போது! வைரம் அறியாத ஜோதியை உங்கள் வீரம் தருகிறது இப்போது! சில சமயங்களில் நான் நினைத்து நினைத்து நெக்குருகுவது வழக்கம்!

(சிவாஜி திகைத்துத் திரும்பிப் பார்க்க)

ஆம்; ஸெபுன்னிஸா உங்கள் வீரத்தை மதிக்கிறாள்!

(சிவாஜி திகைப்படங்கி திரும்பவும் உலவுதல்)

சிவாஜி: விஷயத்தைச் சொன்ன பிறகுதானம்மா, தவறா சரியா என்று சொல்ல முடியும்!

ஸெபு: மேகம் குவிந்தால் மயில் ஆடுகிறது! மரங்கள் அசைந்தால் குயில் பாடுகிறது! இரவு வந்துவிட்டால் சில் வண்டு இடைவிடாமல் இசைக்கிறது! வசந்தத்தின் வரவை நாணல் தலைசாய்ந்து வரவேற்கிறது! உயர்ந்து நிமிர்ந்த மரத்திலேதான் கொடி உற்சாகமாகப் படர்கிறது! ஞானமுள்ளவன் விரலினால்தான் வீணையிலே நல்லிசை எழுகிறது! சமுத்திரத்திலே நிறைய ஜலமிருந்தாலும் சக்கரவாகப் பட்சி பனித்துளியைத்தான் நாடுகிறது!

சிவாஜி: பாதுஷாவின் மகளுக்கு கற்பனை ஊற்றெடுக்கிறது!

ஸெபு: ரசிகர்களைக் கண்டால்தான் கவிஞர்களுக்குப் பாட வருகிறது!

சிவாஜி: உங்கள் பேச்செல்லாம் குழப்பமாக இருக்கிறது!

ஸெபு: தெளிவுபடுத்தத்தான் விரும்புகிறேன் நான்! மனம் நடுங்குகிறது!

சிவாஜி: எதிரே நிற்பது சிவாஜியானாலும் இளவரசி நடுங்கக் கூடாது!

ஸெபு: பாய்ந்து வந்தது ஈட்டியானால் நடுக்கம் எடுக்காது! நான் கேட்க வந்திருக்கும் விஷயம்... ...எப்படிச் சொல்வேன் சத்ரபதி! எனக்குக் கிழக்கே அச்சமிருக்கிறது! வடக்கே நாணமிருக்கிறது! மேற்கே மடம் தடுக்கிறது! சுருக்கமாகச் சொன்னால் நால் வகைக் குணத்திற்கும் நடுவிலே நிற்கிறேன் நான்!

சிவா: அப்படியானால் இங்கு வந்திருக்க முடியாது! வந்து விட்ட பிறகு குழப்பம் கூடாது! சும்மா சொல்லுங்கள்!

ஸெபு: வயதறிந்த நாள்முதல் நான்.... ....நான்.... ....உங்களைக் காதலிக்கிறேன்!

(சிவாஜி திகைத்தல்)

வீரன் யார்—கோழை யார்?

கார்டினல் ரிச்லூ என்ற பிரபல வீரர், மனிதர்களின் குணங்களை அறிய ஒரு ஆச்சர்யமான முறையைக் கையாண்டார்,

அவருடைய வீட்டுக் கூடத்தில் ஒரு புறத்தில், அடிதடி போர் முதலிய பலாத்காரங்களைத் தீட்டிய சித்திரங்களைத் தொங்க விட்டார். மறுபுறத்தில் அன்புள்ள குடும்பம், இயற்கைக் காட்சி முதலிய அமைதி கமழும் சித்திரங்களைத் தொங்கவிட்டார்.

உள்ளே தம்மைக் காண வரும் மனிதன், பலாத்காரப் படங்களின் அருகே சென்று வியந்து நின்றானே, "இவன் கோழை" வன்று ரிச்லூ தீர்மானிப்பார். அமைதியான படங்களைக் கண்டு வியந்து நின்றால்தான், "இவன் நல்ல வீரன்" என்று மதித்து, அவனுக்கு ராணுவத்திலே உயர்ந்த பதவிகளையெல்லாம் அவர் அளிப்பார்.

கதையும் நிஜமும்

ஒரு பத்திரிகையின் தொடர்கதையிலே வரும் கதாநாயகி மெல்ல நோயால் வாடி மெலிந்துகொண்டு வந்தாள். இந்தக் கதையைத் தொடர்ச்சியாகப் படித்துக்கொண்டுவந்த ஒரு இளம்பெண்ணும் அதே வியாதியால் மெலிந்துவரத் தொடங்கினாள், கீர்த்தி வாய்ந்த ஆங்கில ஸர்ஜன் டாக்டர் புரூஸ்–போர்ட்டர் என்பவரிடம் இந்தப் பெண் கொண்டு போகப்பட்டாள். அவர் என்ன சிகிச்சை செய்தும் பெண் தேரவில்லை. பெண்ணைக் கவனித்தார். அவள் படித்துவரும் ஒரு பத்திரிகைக் கதையைக் கண்டார். அந்தக் காதசிரியரிடம் ஓடினார் டாக்டர் புரூஸ். "உங்கள் கதாநாயகி கடைசியிலே என்ன ஆகப்போகிறாள்?" என்று கேட்டார். "ஆவதென்ன? சாகப் போகிறாள் என்று பதிலளித்தார் ஆசிரியர். "இல்லை; அவளைக் கொல்லாதீர்கள் நோய் தீர்ந்து சுகப்படச் செய்யுங்கள்" என்று கெஞ்சினார் டாக்டர். டாக்டரின் வேண்டுகோளின்படியே கதாநாயகியை மங்களகரமாய் வாழச் செய்தார் ஆசிரியர். டாக்டரின் நோயாளியான பெண்ணும் நோய் குணப்பட்டுப் பிழைத்து விட்டாள்!

இதை நீங்கள் எதிர்பார்த்திருக்க முடியாதுதான்! ஆயினும் என் இதயங்கொண்ட ஒரே எண்ணம் துணிந்து வெளியிடும்படி என்னைத் தூண்டிற்று! சத்ரபதி! தடைகளைக் காட்டி என் காதலை மறுத்துவிடாதீர்கள்! மங்கையருக்குக் காதல் எவ்வளவு பெரிய அவஸ்தை என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல!

சிவாஜி: என்னைத் தப்புவித்ததற்குக் கைமாறு கேட்கிறீர்களா?

ஸெபு: இல்லை! உதவிக்குக் கைமாறாகப் பெறக்கூடிய சொத்து காதல் அல்ல என்பது எனக்குத் தெரியும்.

சிவாஜி; பிறகு எப்படி உங்களுக்கு இந்த விசித்திர எண்ணம் தோன்றியது?

ஸெபு: எப்படித்தோன்றியது என்று தெரியாமலே தோன்றுவதுதானே காதல்!

சிவாஜி: காதலைக் கடந்த வயதாகிறதம்மா எனக்கு!

ஸெபு: ஓவியங்களுக்கு வயது கிடையாதே சத்ரபதி!

சிவாஜி: எனக்கில்லாத பெருமையை ஏனம்மா அள்ளி இறைக்கிறாய்?

ஸெபு: உங்கள் பெருமை உங்களுக்குத் தெரியாது மஹாவிர!

சிவாஜி: காதலுக்கு இது நேரமில்லை ஸெபுன்னிஸா! சொந்த நாட்டின் சுதந்திரம் பறிபோய்க் கொண்டிருக்கிறது! துடிக்கின்ற மனித குலம் விடுதலை எப்போது என்று கேட்கிறது! சிறைச்சாலைகளெல்லாம் போதாமல் மாளிகைகளெல்லாம் சிறைச்சாலைகளாகிக் கொண்டிருக்கின்றன! நாடெங்கும் சவக் காடுகள் நிறைந்து கொண்டிருக்கின்றன! நாளை என்ன என்று கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன் நான்! இந்த நேரத்தில் காதலிக்கிறாயா நீ!

ஸெபு: போர்க்களத்திலும் கூட உங்களுக்கு உதவியாய் இருப்பேன் நான்!

சிவாஜி: போர்க்களத்துக்கு நீ வந்தால் போரிலே நம் படைகள் தோற்றுவிடும்! அழகு இருக்க வேண்டிய இடம் அரண்மனைதான்! களமல்ல! ஸெபுன்னிஸா! இத்தகைய சந்தர்ப்பம் ஏற்பட்டதற்கு மிகவும் வருந்துகிறேன்! எனக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறாள்! வரக் கூடாத ஆசை உனக்கு வந்துவிட்டது! தயவு செய்து மாற்றிக் கொள்!

ஸெபு: உயிர் உன்னிடத்திலே ஏன் இருக்கிறது, ஓடி விடட்டும் என்கிறீர்களா? சத்ரபதி! இந்த எண்ணம் திடீர் என்று ஏற்பட்டிருந்தால் உடனேயே மாற்றிக் கொள்ள என்னால் முடியும்! திறந்த கண்ணிலே சிவாஜியின் உருவம், மூடி வைத்தாலும் மறையா மறுத்து கனவிலும் நனவிலும் என் கருத்திலே நின்றதை எப்படிச் சொல்வேன் சத்ரபதி! ஒரு விநாடியிலே நீங்கள் சொல்லி விட்டீர்கள்! உங்கள் நிலைமைக்கு அது சரியாக இருக்கலாம்! என் மனதைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்! என் விழிகளிலே உங்கள் விழிகளை வைத்துப் பாருங்கள்! என் எண்ணத்தை உங்கள் எண்ணமாகக் கொண்டு பாருங்கள்! நீங்கள் ஸெபுன்னிஸாவாக இருந்தால் உங்கள் நிலைமை எப்படி இருக்குமென்று எண்ணிப் பாருங்கள்! பருவத்தின் துடிப்புக்குப் புகலிடம் தேடியல்ல நான் வந்தது! பசிக்கு உணவு தேடியல்ல நான் இங்கு ஓடி வந்தது! அறிவறிந்த கால முதல் நினைவாக வந்து, அணுத் தோறும் அணுத் தோறும் ஊற்றாக நின்று, இள மனதில் மாறாத புதுமைகளைத்தந்து எதை நினைக்கும் வேளையிலும் இதை மறக்க முடியாமல், உள்ளத்தில் கலந்திருந்த உங்களை, கண்ட பின்னும் கை நழுவ விடுவதென்றால் பொறுக்க முடியாது மஹாவிர! ஒரு வார்த்தை சொல்லுங்கள்! தந்தையின் அனுமதி பெற்றே திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்!

சிவாஜி: நல்லது! உண்மையிலேயே என் இதயத்தில் உங்களுக்கு ஒரு இடம் உண்டு!

ஸெபு: ஆ!....

சிவாஜி: காதலியாக அல்ல! சகோதரியாக! நீங்கள் விரும்பினால் ஸ்வீகாரப் புதல்வியாக! என்னை நீங்கள் மதிப்பது உண்மையானால் காதலிப்பதாகச் சொல்லிக் களங்கப்படுத்தாதீர்கள். இரு வேறு துருவங்கள் இணைவது முடியாது! உங்களுடைய நல்ல மனதை நான் பாராட்டுகிறேன்! தயவு செய்து என்னை மறந்து விடுங்கள்!

ஸெபு: சத்ரபதி!

சிவாஜி: சகோதரி! உங்கள் தந்தையிடம் சொல்லுங்கள் விரைவிலே ஒரு மணமகனைப் பார்த்து உங்கள் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். நானும் வந்திருந்து திருமணத்தை நடத்தி வைக்கிறேன்! ஆனால் சகோதரி! அப்போதாவது தப்பான முறையில் கைது செய்யாமலிருக்கச் சொல்லுங்கள்! நான் வருகிறேன்! (போதல்)

(ஸெபுன்னிஸா திகைத்து நிற்கிறாள்.)

குழந்தை இன்பம்!

[உழைத்து அலுத்து வாடிவரும் தந்தையைக் கண்டதும், ஓடிவரும் குழந்தை, இன்பமூட்டி மனக்கவலையை யெல்லாம் மாற்றுகிறது. வேலை முடிந்து ஓய்ந்திருக்கும் தாய், குழந்தையின் கொஞ்சும் மழலையால், சுட்டித்தனத்தால் இன்பத்தின் எல்லை காண்கிறாள். இத்தனை சிறப்புடைய 'குழந்தை இன்பம்' பற்றி பலர் கருத்தையும் தர நினைத்தோம். இதோ இந்த இதழில் தந்திருப்பது, 'ந. கோவிந்தன்' தீட்டிய கவிதை; படியுங்கள்.]

மலர் முகம்! விண்மின் கண்கள்!
மரகதக் கடைச்சல் மூக்கு!
மலரிதழ் வண்ணச் செவ்வாய்!
மாசிலாத் தங்கக் குஞ்சி!

கலைவளர் பொன் அம் மேனி!
கனிச்சுவை நல்கும் கன்னம்
விலையில்லா மழலைப் பேச்சு!
வளர்மதி குழந்தை கண்டேன்!

அழகிய இதழ்திறந்தே
'அம்மா'வென் றழைத்து நம்முன்
எழுதிடும் கவிதை போல
எழிற்கையை நீட்டி ஆட்டி

மழலையை அளிக்கும் போழ்து
மாகுழல் யாழும் தோற்கும்
எழுதொணு ஒவி யத்தை
இதயத்தில் கூட்டித் தீட்டும்!

நகைமுகம் இன்பப் பாடல்!
நடத்தலோ வண்ணத் தாடல்!
வகைபெறும் இதயத் தெண்ணம்
வடித்திடும் குழந்தை மூறல்!

குகை அஜந் தோவி யங்கள்
குழந்தையின் செயலில் தோற்கும்!
பகைமனம் இல்லா உள்ளம்!
படைப்பினில் உயர்வின் சின்னம்!

எண்ணமோ எழும்ப வில்லை
இதயமோ வான்ப ரப்பு;
சண்டைசெய் செயல்கள், வஞ்சம்!
தவறுகள் கொடுமை இல்லை!

உண்மையே அழகு, இன்ப
அழகதே உண்மை என்ன
கண்மலர் காதல் காட்டும்
கலையுரு குழந்தை இன்பம்!

[கைபோயிற்று, கால் போயிற்று; பிறகும் போரிட்டான், முத்து வகிடு. இராமநாதபுரம் மாவட்டம், வீரத்தின் உறைவிடம். மறக்குலமாட்சி ஆண்ட இடம். இந்தக் கதை — சரித்திரம் — அதைச்சொல்லும்........]

மானமறவன்

ஆற்காட்டு முற்றுகையில் கிளைவ் திணறிப்போனான். அவனைத் திணறடித்தது யார் தெரியுமா? சந்தா சாஹெபன்று; பிரெஞ்சுக்காரனன்று; சிவகங்கை ராமநாதபுரம் மறவர்களே. இந்த மறவர்கள் அசகாய சூரர்கள். இவர்களைப் பார்த்தாலே 'இவர்கள் வீரர்கள், இவர்களிடம் மரியாதையாக நடக்கவேண்டும்' என்று தோன்றும். இந்த வீரர்களே மத்திம காலத்தில் நமது மானத்தைக் காத்தவர்கள்; ஒரு துளி ரத்தம் இருந்தமட்டும் இம்மறவர் உரிமைப்போர் புரிந்தனர்.

ஆற்காட்டு முற்றுகை முடிந்தது; சந்தாசாஹெபும் திருச்சி முற்றுகையில் பிடிபட்டான்; அவன்மேல் குற்றம் சாட்டி அவனைக் கிளைவ் கொன்றான். ஐதராபாத்தில் சுபேதார் கொலையுண்டான்; அங்கே ஆங்கிலேயர் புகுந்தனர்; சலபத்ஜங்கைச் சுபேதாராக்கினர். ஆங்கிலேயர் கை ஓங்கியது; நாட்டில் இரட்டையாட்சி ஏற்பட்டது; யூனியன் ஜாக்கின் நிழலில் நவாப் முகம்மதலி கர்னாடகத்தை ஆண்டான். பேருக்குத்தான் நவாப்; அதிகாரமெல்லாம் கும்பினி கையில். 'நீ அவல் கொண்டா, நான் உமி கொண்டு வருகிறேன்; ஊதி ஊதித் தின்போம்' என்ற கதைதான்.

கும்பினியார் ஏராளமானசுதேசிகளைப் பயிற்றுவித்து படை சேர்த்தனர். அவர்களது பலத்திலேதான் நவாப் தர்பார் நடந்தது. எங்கே? காவேரிக்கு இப்புறந்தான். வைகைக் கரையிலும், தாம்பிரவருணிக் கரையிலும் நவாப்பின் பாச்சா பலிக்கவில்லை; கிஸ்தி வசூலிக்க, படேபடே சாஹெபுக்களை அவன் அனுப்பினான்; கும்பினிப் படைகளுடன் தனது படைகளையும் அனுப்பினான். பலன் பூஜ்யம். 'கப்பம்' என்றால் மறவர் கத்தி உருவினர்; 'கிஸ்தி' என்றால், 'கிட்ட வராதே' என்றனர். இராமநாதபுரம், சிவகங்கை, சிவகிரி, பாஞ்சாலங் குறிச்சி முதலியன வீரர் புரங்கள். அதிலும், சிவகங்கையின் பேர் கேட்டாலே நவாபுக்குப் பகீர் என்னும், ஏன்? அதன் வீர மறவர்களே சந்தா சாஹெபுவுடன் சேர்ந்து தன்னை விரட்டியடித்தவர். 'கிஸ்தி கிஸ்தி' என்று எத்தனை தடவையோ ஓலை விடுத்தான்; ஆள் விடுத்தான்; பயமுறுத்தினான்; படை விடுத்தான். சல்லி பெயரவில்லை.

முடிவில் நவாபு கும்பினிப் படையுடன் தனது மகனை அனுப்பினான்; காரியம் பலிக்கவில்லை. மகன் உம்டட் - உல் - உமார் திரும்பி வந்தான்.

"என்ன உமார்......கிஸ்தி தந்தானா?"

"கஸ்திதான் தந்தான்"

"அரே என்ன சொல்றான்?"

"போ போ சொல்றான்"

"ஹா! க்யா கரேம்? அரே! அவர்களை அடக்காமல் ஏன் வந்தாய்?"

"பாபா! இந்த மறவர்களை மட்டும் நாம் அடக்கி நமது படையில் சேர்த்தால், உலகையே வெல்லலாம்; அவ்வளவு பலசாலிகள்."

"அரே நம்பள்கு இரிசால் செலுத்துறானில்லே; நம் ஹுகுமை லக்ஷியம் செய்றானில்லே........உமார்! ஜோசப் ஸ்மித்துடன் செல்... ....மறவர்களை அடக்கி ஒடுக்கிக்கொண்டா கிஸ்தி."

உமாரும், ஜோஸப் ஸ்மித்தும் பலமான படையுடன் புறப்பட்டனர். இவர்களுக்குப் புதுவைத் தொண்டைமான் வலது கை போல் உதவினான். சேனை வெள்ளம் வருகிறது.

'வரட்டும்' என்று முண்டாத் தட்டுகிறான் ஒரு வீரன். யாரவன்? சிவகங்கை மன்னன் முத்துவடுகநாதந்தேவர்தான். முத்துவடுகநாதர் வீரப்புலியும் கொடைவள்ளலுமான சசிவர்ணத் தேவரின் புதல்வர். இவர் இராமநாதபுரம் அரசருடன் கூடிக் கும்பினிப் படையை எல்லா இடத்திலும் எதிர்த்து நின்றார். இராமநாதபுரம் சேதுபதி இறந்தார். அவர் மகன் மைனர். அவனைத் தளவாய்த் தாமோதரம் பிள்ளை பாதுகாத்தார். இவர் சிறிது காலம் போராடிக் கும்பினியாருடன் சமாதானம் செய்துகொண்டார். ஆதலால் முத்துவடுகநாதர் பக்கபலமில்லாமல் தனியே நின்றார்; தைரியத்தை விடவில்லை. இவர் மனைவியே ராணி வேலு நாச்சியார். சாந்துபீபீ, லக்ஷ்மீ பாய், துர்க்காவதி முதலிய வீராங்கனைகளுடன் ராணிவேலு நாச்சியாரையும் சேர்க்க வேண்டும். தன் கணவனின் வீரத்தை அவள் பதின்மடங்காக்கினாள். 'கண்ணே! கும்பினி-நவாபு சேனை ஆற்று வெள்ளம்போல் வருகிறதே. என்ன செய்வோம்" என்றான் கணவன். "நமது வீரவெள்ளத்தால், அதை அள்ளி விழுங்குவோம்" என்றாள் வேலு நாச்சியார்.

அக்காலம் அன்னியர் கொள்ளையால் மிகவும் கஷ்டப்பட்ட ஊர்களில் சிவகங்கையும் ஒன்று. சந்தா சாஹெபு வந்தான்; கொள்ளையடித்தான். வீரர் எதிர்த்தனர். வீரமறவரை மெச்சித் தன் படையில் அவன் சேர்ந்தான். ஆற்காட்டு நவாபின் சேனை வந்தது; ஊரைச் சூறையிட்டது. வீர மறவர் நவாபை விரட்டியடித்து இளைப்பாறும்போது, தஞ்சாவூர் மராட்டியப் படை புகுந்து, "எங்கள் துளஜாஜீ ஆணை; கொடு கப்பம்" என்றது......"ஊரைப் பார்க்கப் போம்" என்று மராட்டியப் படையை மறவர் திருப்பியனுப்பினர்; மராட்டியர் நாகப்பட்டணம் டச்சுக்காரருடன் வந்து மிரட்டினர். வீர மறவர் அவர்களைப் பொருதி விரட்டினர். புகுந்தது கும்பினி-நவாப் சேனை! அலுத்த புலியை வேட்டை நாய்கள் சூழ்வதுபோல், இரண்டு பெரும்படைகள் மறவர் சீமையைச் சூழ்ந்துகொண்டன. இராமநாதபுரத்தில் உமாரும் ஜோஸப் ஸ்மித்தும் புகுந்து, மைனர் முத்து ராமலிங்க சேதுபதியையும் ராணியையும் பிடித்துத் திருச்சியில் காவல் வைத்தனர்; பிறகு வெற்றி முழக்கத்துடன் சிவகங்கையைப் படையெடுத்தனர்.

அச்சமயம் முத்துவடுகநாதர் வேட்டையாடிக்கொண்டிருந்தார். "ஐயோ மஹாராஜா! நவாபு சேனை புகுந்தது!" என்று தளவாய் ஓடிவந்து செய்தி சொன்னான். "ஆ! வந்துவிட்டார்களா?" என்று சிறிது திகைத்தான் மன்னன். "வரட்டுமே; கைத்தினவு தீர வெளுப்போம்" என்றான் சின்ன மருது. "சக்கையாக வெளுப்போம்" என்றான் பெரிய மருது. "மருது வாக்கு பலிக்க வேண்டுமே" என்றான் மன்னன். "பளீர் பளீர் என்று அவுங்க முதுகிலே பலிக்கும், மகராசா" என்றான் பெரிய மருது. "அவுங்க நெஞ்சிலே சுடச்சுடப் பலிக்கும்" என்றான் சின்ன மருது. "பெரிய மருது! நீ நமது வலக்கை; சின்ன மருது நமது இடக்கை. இரண்டு கைகளிலும் வாள் பிடித்துப் போராடுவோம்" என்று மன்னன் அவசரமாக அரண்மனைக்கு ஓடி வந்தான்.

யார் இந்த மருது சகோதரர்? இவர்களின் வீரப் பெருமை மிகப் பெரிது. இவர்களது பெயரைக் கேட்டாலே, ஜனங்கள் கையெடுத்துக் கும்பிடுவர். பெரிய மருது அசகாய சூரன்! ஆஜானுபாஹு; பலசாலி; வேட்டையில் நிபுணன்; அவன் வைத்த குறி தவறாது; எத்தனையோ ஆங்கிலேயர் அவன் திறமையை மெச்சினர். வாள் வீச்சில் அவனை யாரும் மிஞ்சமுடியாது. அவன் விளறிக் கம்பைச் சுழற்றிவிட்டால், எதிரியின் கழுத்தைத் திருகி மண்ணில் உருட்டித்தான் திரும்பும். துப்பாக்கி சுடுவதில் அவனிடம் கும்பினித் தளகர்த்தர் கடன் வாங்கவேண்டும். அக்காலம் சிவகங்கைக்கும் காளையார் கோயிலுக்கும் இடையில் காடு அடர்ந்திருந்தது; அதில் புலிகள் திரிந்தன; பெரிய மருது எத்தனையோ புலிகளை எமலோ

நல்ல படங்களை நாங்கள் விநியோகிக்கிறோம்

வைத்யாவின்

வைரமாலை

மனோஹர், பத்மினி, ராகினி தங்கவேலு நடிப்பது

ஆர். ஆர். பிக்சர்ஸ்

கூண்டுக் கிளி

சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர்., சரோஜா, குசலகுமாரி நடிப்பது

பத்மினி பிக்சர்ஸ்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

எங்கும் வெற்றிகரமாக விழாக் கொண்டாடுகிறது

விபரங்கட்கு:

புவனேஸ்வரி பிக்சர்ஸ்

பண்ணுருட்டி. (தென் ஆற்காடு மாவட்டம்)

கத்துக்கு அனுப்பினான். சுடுவது மட்டுமன்று; பெரிய மருது ஒரே பாய்ச்சலில் புலியைப் பிடித்து அதன் வாயைக் கிழித்துக் கொல்வான். அவன் முத்துவடுகிநாதத் தேவருக்கு வேட்டைத் துணைவனானான். வேட்டை நாய்களைப் பிடித்துச் செல்வதே அவனது வேலை; அவ்வேலையிலிருந்து அவன் மஹராஜாவுக்கு நண்பனாகி, ஊருக்குத் தலைவனுமானான் எதனால்? வீரத்தால். சின்ன மருது அரசனுக்கு அடைப்பக்காரனா யிருந்து படிப்படியாக உயர்ந்தான்; அவன் வில்லாதி வில்லன்; நல்ல அறிவாளி; அரசியல் சதுரங்கத்தில் நிபுணன்; ஜன வசீகரமானவன். ஊரை அடக்கியாளுவதில் சமர்த்தன். இந்த இரண்டு மருதுக்களும் ஊருக்குத் தலைவர்களானார்கள்; இவர்கள் பாமர ஜனங்களுக்கெல்லாம் போர்ப் பயிற்சி தந்தனர்; பெரும்படை திரட்டினர். இவர்களை எல்லா வகையிலும் ஆதரித்தவள் இராணி வேலு நாச்சியார். பெரிய மருது இராணிக்கும் போர்க்கலை பயிற்றுவித்தான். இனிக் கதைக்கு வருவோம்,

மன்னன் வேட்டையிலிருந்து திரும்பி வந்தான். அரண்மனையின் முன்னே பெரிய கும்மாளம். போர் முரசம் இடிமுழக்கம் செய்கிறது; பறைகள் கொட்டுகின்றன; வீரர் தசை துள்ள அடியெடுக்கின்றனர்; வேலுநாச்சியார் கொடிபிடித்து "போ முன்னே!" என்று ஏவுகிறாள்.

நவாபு - கும்பினிச் சேனை இதோ வந்துவிட்டது; சிவகங்கையில் நுழைந்து விட்டது. மன்னன் இளைப்பாறவில்லை; உண்ணவில்லை. ஆயுதச்சாலைக்கு நேரே சென்று, போர் அங்கி மாட்டி, வாளும் கேடயமும் பிடித்து வெளியே வந்தான், அதற்குள் நிலைமை அசாத்தியமாகி விட்டது. "மாரோ மாரோ" என்று உமார் கர்ஜித்தான்; "ஷூட் ஷூட்" என்று ஜோஸப் ஸ்மித் உறுமினான்...."வெட்டு, வெட்டு; கொல், கொல்" என்று இராணியும் மன்னரும் கட்டளையிட்டனர். மறவர் படை ஊழியிடிபோல் பகைவரைத் தாக்கியது. கொடும் போர்! வீடுகளில் தீ! வீதிகளில் சூறை! 'ஹும்' என்றால் கழுத்தில் கத்தி! படுகொலை நடக்கிறது. இதோ பகைவர், இராணியையும் மன்னரையும் பிடிக்க வருகிறார்கள்.

ஓடிவந்தான் பெரிய மருது; "மஹாராசா! பாவிப்பயல் கெடுத்தான்; வழிகாட்டிக் கொடுத்து விட்டான். உடனே காளையார் கோயில்" என்றான். சின்னமருது வண்டி தயாராக வைத்திருந்தான். யாரும் காணாது இருவரும் மகாராஜாவைக் காளையார் கோயில் கோட்டைக்கு அழைத்துச் சென்றனர். பெரிய மருது அங்கே பெரும்படை திரட்டினான். கோட்டைமேல் ஏறிச் சுற்றிலும் பார்த்தான். சிவகங்கையில் தோற்ற எதிரி இதோ காளையார் கோயிலுக்கும் வருகிறான்! கர்னல்பான்ஜூர், நவாபு சேனையுடன் புயல்போலச் சீறி வருகிறான்! "மகாராஜா! அந்தப் பாவி இங்கேயும் வழிகாட்டி மோசம் செய்தான்" என்று பெரிய மருது முறையிட்டான்.

"அந்த அயோக்கியத் துரோகியின் தலையைத் திருகி வேட்டை நாய்க்குப் போட்டு மறுவேலை பார்" என்று மன்னன் சீறிச் சினந்தான்.

அந்தத் துரோகி! வழக்கமாக நமது நாட்டுக்குச் சனியனாக வரும் வஞ்சப்பதர்களில் இவனும் ஒருவன். ஒதெல்லோவில் வரும் மகா பாதகனான அயாகோவை அறிந்தால். இவனை அதிகமாக வர்ணிக்க வேண்டாம். பெயர் 'சுப்பையா'. அவனைக் 'குண்டுணிச் சுப்பன்' என்பார்கள். குண்டுணிச் சுப்பன் மகா விஷமப் புச்சம்; நிமிஷத்துக்கு ஒரு சேட்டை செய்வான். திடீர்ப் புளுகன்; முழுப் பூசனிக்காயைச் சோற்றில் அமுக்கும் பேர்வழி. இரக்கமற்ற வறட்டுப் பாவி. பஸ்மாசூரனுக்கு அண்ணன். அவன் நன்றாகப் படித்தவன்; தடபுடலாகப் பிரசங்கம் செய்வான்; வயிற்றுப்பிள்ளை கரையும்படி முன்னால் பேசி, ஆட்களைக் குல்லாய் போடுவான். பின்னால் சூனியம் வைப்பான். இவன் முதலில் மகாராஜாவின் பிரியத்தைச் சம்பாதித்தான்; அவன் பேச்சு மகாராஜாவுக்குப் பொழுதுபோக்கா யிருந்தது. அக்காலம் பத்திரிகை கிடையாது; குண்டுணிச் சுப்பனே மகாராஜாவின் தினசரிப் பத்திரிகை. "இவன் அப்படி, அவன் இப்படி" என்று கோள் சொல்லி ஆட்களைச் சிண்டு முடித்துவிட்டு, வேடிக்கை பார்ப்பதே குண்டுணியின் வேலை.

"ஆஹா! தங்களைப்போல் உண்டா? தர்மாத்மா, என்றால் தாங்களே..." என்று இங்கே புகழ்வான், மெல்ல எதிரியிடம் சென்று. "அவன் கிடக்கிறான் அற்பப் பயல்; வாய் சர்க்கரை. கை கர்ணக் கிழங்கு—உங்களுக்குச் சமானம் வருமா?": என்று புகழ்ந்து பணப்பையைத் தட்டிக் கொண்டு போவான்.

இந்த அயோக்கியனைச் சின்ன மருது ஒரு சமயம் கையுங் களவுமாகப் பிடித்தான். அது முதல் மருது சகோதரரைக் கண்டால், குண்டுணிக்குப் பிடிக்காது. அவன்மேல் பிரியமா யிருக்கும் அரசனையும் பிடிக்காது. குண்டுணிச் சுப்பன் எததனை எத்தனையோ நாச காரியங்கள் செய்தான்; அனைத்திலும் கொடியது அவன் இன்று செய்த துரோகம் பகைவர் கையாளாகி அரசனும் மருது சகோதரரும் இருக்கும் இடத்துக்கு அவன் வழிகாட்டினான்; படைகளுக்கு வெடிமருந்தும் ஆயுதமும் உணவும் உதவும் இடங்களைச் சுட்டிக் காட்டினான். அரசி வேலுநாச்சியாரைப் பிடித்துக் கொடுக்கச் சில பணிப் பெண்களைத் தயாரித்துக்கொடுத்தான். நிதிச்சாலையைக் காட்டிக் கொடுத்தான். போதுமா துரோகம்? "இதோ பார், என்னவர்; எனது நாடு—பிடித்துக்கொள்" என்று உள்ளே அன்னியரை அழைத்து வந்து காட்டும் இப்படிப்பட்ட துரோகிகளாலே தான் நமது தேசம் இந்த நிலைக்கு வந்தது. இன்றும் இதே துரோகந்தான் நமது தாயின் மார்பில் ஈட்டி குத்துகிறது.

துரோகி காட்டிய வழியே வந்து. கர்னல் பான்ஜூர் காளையார் கோயில் கோட்டையை வளைத்துக்கொண்டான். பெரிய மருதுவுக்குப் படுகோபம் வந்தது. தனது வீரர் இரவில் பகைவரது பாசறையில் உறங்கிய குண்டுணிச் சுப்பனை எப்படியோ தூக்கிவர வேண்டுமென்றான். அவன் ஆணைக்கு எதிர் கிடையாது. நவாப்பின் சிப்பாய்கள் போல வேஷம் போட்டு, உருது தெரிந்த நான்கு மறவர் சென்றனர். அவர்களுக்குப் பின்னே சிறிது தூரத்தில் ஒரு படை பதுங்கிப் பதுங்கிப் பதுங்கிச் சென்றது. நாலு மறவரும் குண்டுணியைப் பின்கட்டாய்க் கட்டி வாயில் துணியடைத்துத் தூக்கி வந்தனர். பெரிய மருது வாளை உருவினான். "அட துரோகி! ஊரைக் காட்டிக்கொடுத்த பாவி! இதோ சாகப்போகிறாய். இப்போதாவது உன் குற்றத்தை ஒப்புக்கொள்; பகைவர் உளவைச் சொல்" என்று சின்ன மருது கிண்டிக் கிண்டிக் கேட்டான். பகைவர் சூழ்ச்சிகளையெல்லாம் குண்டுணி சொல்லி விட்டான். அரசரைக் கொலை செய்த பிறகு, உமார் ராணியைக் கைது செயது கொண்டு செல்வது.......சிவகங்கைச் சீமையைக் கொள்ளையடிப்பது — இன்னும் பல உபயோகமான செய்திகளும் சொன்னதால். பெரிய மருது குண்டுணியைக் கொல்லாமல், விலங்கு போட்டுச் சிறைக்கு அனுப்பினான். இதற்குள் நவாப் சேனை கொடிய போர் தொடங்கியது. கும்பினிப்படை கோட்டை மதிலை இடித்துக் கொண்டிருந்தது. கைதியான குண்டுணிமேல் ஒரு குண்டு விழுந்தது. குண்டுணி இறந்தான். விதியே அவனைக் கொன்றது. மறவர் திடீர் திடீரென்று கும்பினிப் படையை எதிர்த்தனர். பெரிய மருது நவாப் சேனையைச் சடசட வென்று வீழ்த்தினான். அரசன் கோட்டை மதிலிலிருந்து குண்டு பாய்ச்சிப் பகைவரைக் காலன் போல் கொன்றான்.

மறவர் குண்டுக்குக் குண்டு, குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு—சரியான பதில் கொடுத்தனர். திடீரென்று சின்ன மருது "மகாராசா! கோட்டைவாசல் எதிரி கைப்பட்டது; நமது வெடிமருந்து அறுவானது; உணவு வரவும் வழியில்லை" என்று வ்சனித்தான். "மருது! நீயும் அண்ணனும் எப்படியாவது இராணியைக் காப்பாற்றித் திண்டுக்கல்லுக்குக் கொண்டு செல்லுங்கள். எனது உடம்பில் துளி ரத்தம் இருக்குமட்டும் எதிரிகளை வெட்டி வீழ்த்தி வீர சொர்க்கம் அடைகிறேன்" என்றான் அரசன். "அரசே! தாங்களும் தப்பினால் நல்லது; தங்களை எப்படி இழப்போம்! நிலைமை அபாயமாயிருக்கிறது. ஹைதராலி இந்தப் பக்கம் வந்திருக்கிறான். அவன் கும்பினிக்காரனின் விரோதி; பலசாலி. அவனை நான் உதவிக்கு அழைத்து வருகிறேன். எதிரிகளை நொறுக்கியெறிவோம்" என்றான் மருது. "மருது! ஒரு அன்னியனை எதிர்க்க இன்னொரு அன்னியனை அழைத்து வருவது, தீயை அணைக்க எண்ணெய் வார்ப்பது போலாகும். வந்தவன் நமது சீமையைப் பிடித்துக் கொண்டு நம்மை அடிமை செய்வான். அதைவிட உயிர் உள்ள மட்டும் போர் செய்வதே வீரம்....வீர தேவதைக்கு நானே பலியாகிறேன்; என் வீர ரத்தம் வீண் போகாது; ஒவ்வொரு துளியும் ஒரு வீரனாகக் கிளம்பும். நீ இராணியைக் காப்பாற்று" என்றான் அரசன்.

இதற்குள் கும்பினிப்படை கோட்டை மதிலை நான்கு பக்கமும் இடித்துத் தகர்த்து உள்ளே புகுந்தது. முத்துவடுகி கோடையிடி போலக் குமுறிப் பகைவரை எதிர்த்தான். மறவர் யாரும் புறங்கொடுக்கவில்லை. கோட்டைக்குள் 500 வீரரே இருந்தனர்; என்றாலும் ஒரு மறவன் பத்து ஆட்களைக் கொன்றான்....எதிரியின் படை பாதிகாலி....பான்ஜூர் டாம் டாம் என்று குண்டு பாய்ச்சி மறவரை வீழ்த்தி, முத்துவடுகி நாதரை வளைத்துக் கொண்டான். "நான் கைதியாக இருக்க மாட்டேன்; வீரனாகவே இறப்பேன்" என்று முத்து வடுகிநாதன் தன்னைக் கட்ட வந்த பகைவரை வெட்டித் தள்ளினான்; சூறாவளிபோலச் சுழன்று வாள் வீசினான். பகைவர் வாளைப் பிடுங்கினர். பிறகு, கிட்ட வந்தவரைக் கையால் குத்தினான். பகைவர் கையை வெட்டினர். பகைவரைக் காலால் உதைத்தான். காலும் வெட்டுண்டது. இன்னும் அருகே வந்தவரைப் பல்லாற் கடித்தான். முகத்திலும் குத்து விழுந்தது. மறுபடியும் வந்தவர் மேல் "தூ தூ" என்று எச்சில் உமிழ்ந்தான். மார்பில் ஒரு குண்டு பாய்ந்தது. "என் கடமை" முடிந்தது...என்று முத்து வடுகிநாதத் தேவன் இறந்தான். காளையார் கோவில் கோட்டை பிடிபட்டுத் தரை மட்டமானது. அக்கோட்டையின் தடம் கோயிலுக்கருகே இருந்தது. எல்லாம் போய் ஒரு குட்டிச் சுவரே மிஞ்சியது. அதைப் பார்க்கும்போதெல்லாம் முத்து வகிடு நாதரின் வீர ரத்தம் நமது நினைவுக்கு வரும். *

விற்பனையாகிறது

உயர்திரு. E. V. K. சம்பத் அவர்கள் எழுதிய

"முடி சாய்ந்தது"

விலை ரூ. 1—4—0

விற்பனையாளர் கழிவு 25 சத விகிதம்

— விபரங்கட்கு —

நீலா நிலையம், 11-A, செரி ரோட், சேலம்.

இவனன்றே கவிஞன்

நள்ளிரவு, ஆகாயத்தில் படர்ந்துள்ள முகிற் கூட்டங்களுக்கிடையில் விண் மீன்கள் சிரித்துக்கொண்டிருந்தன. ஒரு புறத்தில் திங்களின் செழுமையான ஒளி, மற்றொரு புறத்தில் தென்றலின் இனிய இசையால் அங்குள்ள அழகான முல்லைக் கொடிகள் ஊஞ்சலைப் போல் ஆடிக்கொண்டிருந்தன. மலையருவிகளிலிருந்து பெருக்கெடுத்த நீர்த்துளிகள், தனது கம்பீரமான பார்வைவையைக் காட்டிக்கொர்ண்டிருந்தது. வானரங்கில் உலவும் மின்னற் கொடிகள் ஓயாது கண்களைச் சிமிட்டிக்கொண்டே இருந்தன, கோங்கு மரத்திலும், செண்பக மரத்திலும் பூத்துக் குலுங்கும் மலர்கள், மணம் விசிக் கொண்டிருந்தன. சங்கத் தமிழ் வளர்த்த வைகைக் கரையோரத்தில் வண்டுகள் வளைந்தோடிக் கொண்டிருந்தன. அதனைச் சூழ்ந்துள்ள இடத்தில் அடர்ந்த புதர்களும், வண்டுகளின் ரீங்கார ஒலியும் ஒலித்துத் கொண்டே இருந்தது. சுற்று முற்றிலுமுள்ள கிராமங்களில் பனையோலைகளால் அலங்கரிக்கப்பட்ட சிறு குடிசைகள் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

இவ்வித இயற்கை அமைப்புகளால் அலங்கரிக்கப்பட்ட அந்த பாண்டிய நாட்டின் ஒரு பகுதியில், ஒரு இளமங்கை தெற்குத் திசையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்நேரத்தில் அவள் கண்களுக்குத் தெரிந்ததையெல்லாம் சோழநாட்டின் விளக்கொளிதான் — சரிந்திருந்த மண் மேடுகள். இவைதான் அவள் கண்ட அந்நேரக் காட்சிகள். ஆனால் அவள் எதிர்பார்த்த காதலன் தோன்றவில்லை; விழிகளை அசைத்துக் கொண்டிருக்கும் கலங்கரை விளக்கந்தான் தெரிந்து கொண்டிருந்தது. அவள் ஆவலோடு காத்திருந்த கட்டழகன் காணவில்லை; அதற்கு மாறாக ஏமாற்றந்தான் கண்டாள், வெற்றிகளைக் கண்ட விர வாளோடு, தன் அன்புக் காதலியைக் காணவேண்டும் என்று ஆர்வமோடு வரும் அந்நாட்டுப் புலிக்கொடியோன் தோன்றவில்லை; அதற்குப் புறம்பாக பாண்டிய நாட்டின் நள்ளிரவுக் காவலன்தான் ஒரு மூலையில் காட்சியளித்துக் கொண்டிருந்தான், இவ்வித ஏமாற்ற நிலையில் பாண்டிய நாட்டின் பாவை ஒருத்தி பரிதாபத்தோடு நின்றுகொண்டிருந்தாள். அந் நோத்தில் அவளின் உள்ளமெல்லாம் உறையூரைத் தலைநகராக் கொண்டு, உயர்ந்த மாளிகையில், உல்லாசம் நிறைந்த தனி அறையில் அயர்ந்து உறங்கும் கிள்ளிவளவன் மீதுதான் அவளின் ஏக்கம் சூழ்ந்திருந்தது. கொலு மண்டபத்தை அலங்கரிக்கும் அந்தக் கோமகன் — உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டு சென்ற அந்தக் கொற்றவனின் மீதுதான் தனது எண்ணத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

அன்று களத்திலே வட்டமிட்டிருக்கும் கழுகுகளை விட்டு, வெற்றி பெற்றுவிட்டேன் என்பதன் அறிகுறியாகப் போர்க்குரிய முரசறைவித்து, அதன்பின் குதிரைப் படைகளும், யானைப் படைகளும், 'எங்கள் மன்னன் வெற்றி பெற்றுவிட்டான்' என்கின்ற முகபாவத்தோடு தனது கம்பீர ஒலியைக் கிளப்பிக்கொண்டுவரும் அந்தக் களிறுகளும், வெண் கொற்றக் குடையோடு, விரர்களின் அணி வகுப்போடு அன்று வாகை மாலை சூடி வந்த வெற்றிக் கொடியோனின் விரவுரைகள் அவளின் மனத் திரை முன் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டே யிருந்தன, 'கதிரவன் வருவதற்கு நேரமானாலும் நான் உன்னைக் காண வருவது நேரமாகாது' என்று அன்னாள் அவன் கூறிய வார்த்தையைக் கேட்டுக் கேட்டு என்றும் ஏங்கி நின்றது போல் அன்றும் ஏங்கியவாறு நின்று கொண்டிருந்தாள் அம் மடக்கொடி! யாழுக்குரிய கம்பியை இழந்த பாணனைப் போல் தன் தலைவனைக் காணாது ஏங்கிக்கொண்டிருந்தாள். வெளி முகத் தோற்றத்திற்கு அவளொரு இதயராணி — மணத்தை அள்ளிவரும் பூங்காற்று - பாண்டிய நாட்டின் பைந்தமிழ்ச் செல்வி!

மறுநாள் காலை, பொழுது புலர்ந்தது, அடிவானத்திலிருந்து தனது செந்நிற ஒளியைக் காட்டியவாறு எழுந்தான் கதிரவன். மரக்கிளைகளிலும், செடி, கொடிகளிலும் உறங்கிக்கொண்டிருந்த விதவிதமான பறவைகள் — தனது உறக்கத்தைவிட்டு மேல் நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. ஆதவன் வருகையற்று, இரவெல்லாம் கோபித்துக் கொண்டிருந்த செந்தாமரை தனது இதழ்களைப் பரப்பி அந்தக் கதிரவனுக்கு இன்பமளித்துக் கொண்டிருந்தது. ஆனால் இரவெல்லாம் உறக்கங்கொள்ளாது அந்தஉறையூரானை நினைத்துக் கொண்டிருந்த அம் மங்கை, எதிரே உள்ள ஓடையின் அருகில் அமர்ந்திருக்கும் நாரையிடம், தனது குறைகளைக் கூறவேண்டும் அதனையே தூதனுப்ப வேண்டும் என்று எண்ணியவாறு சிறு குடத்தை எடுத்துக்கொண்டு, அன்னத்தைப் போல் நடந்து சென்றாள். நாரையும் மீனுக்காக, உறங்குவதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்தது. இதற்குள் அந்நீரில் படும் உருவத்தைக் கண்டு பயந்தவாறு பின் நோக்கிப் பார்த்தது, ஓரளவு, தனது உள்ளத்தில் கொண்டிருந்த பயத்தைவிட்டு வெற்றி பெற்றது. பக்கத்திலே வந்தாள் அந்தப் பாவை; அவளின் விழிப்பு நிலையைக் கண்ட நாரை சிறிது இரக்கம் கொண்டது போல் இருந்தது. இதற்குள் அவள் பேச்சை ஆரம்பித்தாள்.

அழகிய இளங் கால்களையுடைய நாரையே! உன் இரு கால்களைப் பிடித்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். நீ எனக்கு ஒரு உதவி செய்கிறாயா? சிறகடித்தோடும் சக்தி இயற்கையாக உனக்கு அளித்திருப்பதால் உன்னை உதவி செய்யச் சொல்கிறேன். எனக்கு இந்த உதவி செய்துவிட்டால், நீ எந்தப் பொருளைக் கேட்கிறாயோ, அந்தப் பொருளை நான் தருகிறேன். 'உறையூரைத் தலைநகராகக் கொண்டு விளங்கும் சோழ நாட்டின் தலைவன்—சொன்ன சொல்லைத் தவறாது நடக்கும் அந்தக் கிள்ளி வளவனிடம், பாண்டிய நாட்டிலுள்ள மங்கை ஒருத்தி காதலென்னும் கொடிய நோய்க்கு ஆளாகியிருக்கிறாள் என்று மட்டும் சொல்! நீ வேறு எதையும் கூறவேண்டாம். எங் நாட்டைப் பற்றியோ, அல்லது என்னுடைய பெயரைப் பற்றியோ என்னைப் பெற்று வளர்த்த அன்னையின் பண்பொழுக்கத்தைப் பற்றியோ கூறவேண்டாம் நீ செய்ய வேண்டியிருப்பதெல்லாம், காவிரியின் கரையோரத்தில் சுதந்திரமாக சுற்றித்திரியும் குயிலுக்குள்ள சுதந்திரத்தைக் கூட இழந்து அல்லும் பகலுமாகக் கண்களை மூடாது தன் இயற்கைப் பொலிவை இழந்து கிடக்கிறாள் ஒரு மங்கை! என்பதை மட்டும் கூறினால் போதும். அத் தென்னவன் என்னைப் பற்றிப் புரிந்துகொண்டு வருவான். உடனே அவனிடத்தில் உன்னைப் பற்றிக் கூறி நீ வேண்டுவனவெல்லாம் வாங்கித் தருகிறேன் என்று நாரையிடம், நங்கை நயந்து கேட்கிறாள்'' இத்தகைய இனிமையூட்டும் முத்தொள்ளாயிரப் பாடலைப் பார்ப்போம்.

செங்கால் மடநாராய் தென்னுறந்தை சேறியேல்
நின்கால் மேல் வைப்பேனென் கையிரண்டும் — நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழும் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

என்னை யுரையலென் பேருரைய லூருரையல்
அன்னையுமின்ன ளெனவுரையல்— பின்னையுந்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறேயுரை.

—முத்தொள்ளாயிரம்

வே. கபிலன்.

சித்தூர் மாவட்ட மாநாட்டு ஏற்பாடுகள்

பொதட்டூர் பேட்டையில் ஜுலை 10, 11–ல் தி. மு. க. மாநாடுகள் நடைபெறும்......

கழகம் சித்தூர் மாவட்டத்தில் முதன் முதலில் சுடர்விட்டெரிந்தது பொதட்டூர் பேட்டையில்தான், முன்னணி வீரர்கள் பலர் அடிக்கடி சென்று கொள்கை முழக்கமிட்டதும் பொதட்டூர் பேட்டையில்தான். அண்மையில் நடைபெற்ற திருத்தணி போராட்டத்தில் எண்ணற்ற இளைஞர்களைச் சிறைக்கனுப்பி தியாகத் தழும்பேற்றதும் பொதட்டூர் பேட்டைதான்.

ஓட்டல் காண்ட்ராக்டர்கள் பொதட்டூர் பேட்டையில் முகாம் செய்து ஆவன செய்துவருகிறார்கள், தெற்கிலிருந்து வரும் தோழர்களை வரவேற்க அரக்கோணம் ரயிலடி வாரம், வேலூர் பகுதிகளிலிருந்து வருபவர்களை வரவேற்க சோளிங்கபுரம்–திருத்தணி, பஸ் நிலையங்களிலும், தொண்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர் ரயில்வே நிலையத்திலிருந்து மாநாடு செல்ல பிரத்தியேக பஸ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் மாநாட்டில் நிறைவேற இருக்கும் நல்ல தீர்மானங்கள் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழர்களின் நல்வாழ்விற்கு அடிகோலுவதாக இருக்கும். முதல் மாநாட்டிற்கு பழுத்த சுயமரியாதைச் சுடர் அ. பொன்னம்பலனார், தலைவராகவும், திறப்பாளர் கே. ஆர். இராமசாமி அவர்களும் அரசியல் மாநாட்டிற்கு தலைவராக எல்லை பிரச்சனை தோன்றிய நாள் முதல் இரவு பகலாக உழைத்தவரும் உத்தமத் தோழர் இளைஞரேறு ஏ. எல். சி. கிருட்டினசாமியும் திராவிடநாடு துணை ஆசிரியரும் தி. மு. க, முன்னணி வீரர்களில் ஒருவரான தோழர் இராம. அரங்கண்ணல் அவர்கள் திறப்பாளராகவும் வர இசைந்துள்ளார்கள். திருத்தணி தோழர் என் ஏ. ரஷீத் மாநாட்டின் எல்லா நடவடிக்கைகளையும் சிறப்பாக நடத்த பொதட்டூர் பேட்டையில் முகாம் செய்து கவனித்து வருகிறார். எம. ஜி. ஆர், எஸ். எஸ். ஆர். குழுவினர்களின் ''இன்பக்கனவு'' ''சந்திரமோகன்'' நாடகங்களும் நடைபெற இருக்கின்றன. தேன் மதுரப் பேச்சாளர்கள் பேச இருக்கின்றனர்,

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை **நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)** Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

சிரங்கை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST. கொழும்பு-11.

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14.